உ
குருபாதம்
# ஞானசம்பந்தம்
தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு
மலர் 18] விளம்பி ஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—58 [இதழ் 1

திருச்செந்தூரில், ஸ்கந்தஷஷ்டி விழாவில்



(திருச்சீரலைவாயில்) சூரசங்காரமூர்த்தி தரிசனம்

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்
துணை ஆசிரியர்:- வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

உ
சிவமயம்

# "ஞானசம்பந்தம்"

## உட்பொருள்

பக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1 | "ஞானசம்பந்தம்" | ... | 1 |
| 2 | பதினேழாண்டுகளில் நாம்... | ... | 10 |
| 3 | முப்பொருள் விளக்கம் | ... | 17 |
| 4 | ஒளிவளர் விளக்கு | ... | 21 |
| 5 | ஐந்திர வ்யாகரணம் | ... | 22 |
| 6 | சில திருத்தங்கள் | ... | 26 |
| 7 | அன்பின் வெற்றி | ... | 28 |
| 8 | நாட்குறிப்பு | ... | 34 |
| 9 | அத்திக்காய் | ... | 38 |
| 10 | ALLURING AMARNATH | ... | 44 |
| 11 | ஸ்ரீமத். மௌந. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் | | 49 |
| 12 | 'ஆரூர் அமர்ந்த அரசே போற்றி' | ... | 52 |
| 13 | சிவத்திரு. மௌந. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் | | 55 |
| 14. | செய்திகள் | ... | 57 |
| 15 | கடிதம் | ... | 63 |
| 16 | பதினேழாவதாண்டு மலர்ப் பொருளடக்கம் | ... | i |

---

## அட்டைப்பட விளக்கம்

திருச்செந்தூரில், செவ்வேட்பரமனது (ஐப்பசி) ஆறுநாள் நோன்பு விழாக்குறித்த திருவிழாவில், சூரசங்காரம் நிகழ்ந்ததன் பின்பு, எழுந்தருளிக் காட்சிதரும் முருகப்பிரான் திருமுன்பு தருமை ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்களும், இலஞ்சி திரு சிதம்பரம் பிள்ளை அவர்களும், சீகாழி திரு. விசுவநாத முதலியார் அவர்களும், ஏனைய பல அன்பர்களும்.

---

திருப்பதி :



(தங்கவிமானம்) ஆநந்த நிலையம்



திருக்காளத்தி வழிபாடு

திருக்கள்ளில் வழிபாடு

திருமாற்பேறு வழிபாடு

தருமபுர ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

உ

குருபாதம்

வாழ்க உலகெலாம்!

# ஞானசம்பந்தம்

[ தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு ]

மலர் 18 } விளம்பி கார்த்திகை 10—12—58 { இதழ் 1

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## " ஞானசம்பந்தம் "

### ( பதினெட்டாவது யாண்டு தொடக்கம் )

தருமையாதீனத்தின் தொண்டுகள் பலவற்றுள் ஒன்றாய்த் திங்கள்தோறும் வெளியிடப்பெறும் 'ஞானசம்பந்தம்' தன் பதினேழாவதாண்டு முடிந்து, பதினெட்டாவதாண்டின் தொடக்கம் உற்றுத் தோன்றும் இதழ் இது. எண்களுள் ஒவ்வொன்றும் வெவ்வேறு காரணத்தால், சிறப்புற்று நிற்கின்றது. உலகில் ஒரு கூட்டத்தார், மூன்று, எட்டு, பதின்மூன்று, பதினெட்டு முதலிய மூன்றெட்டுக்களை வெறுப்பது உண்டாம். தமிழர்க்கு மூன்றும் எட்டும் மிகச் சிறந்தவை.

முத்தமிழ், முச்சங்கம், முப்பொருள், முச்சுடர், மூவிடம், முக்கடுகம், முக்காய், முச்சத்தி, முந்நூல், முந்நீர், முத்தொழில், முப்பொழுது, முத்தீ, முப்பொறி, மும்மை, மும்முரசு, முந்நாடி, முக்குழல், முப்பழம், மும்மலம், முப்புரம், மூவகையுயிர், மூவகைத் தத்துவம் முதலிய பற்பலவற்றையும் மூன்றென்னும் எண்மேல் வெறுப்புற்று விலக்கலாமோ? சித்தியும், யோகமும், பிரமாணமும், ஐசுவரியமும், கணிதமும் பிறவும் எட்டெட்டாகக்கொண்டு கூறும் நமக்கு எட்டில் வெறுப்பு உண்டோ? எட்டுத் திசைக்கும் அப்பால் ஏகினும், எட்டுக்கு எட்டாமிடத்திலே குரு இருப்பினும் குற்றம் இல்லை. கள்ளர்க்கும் மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி ஆகிய எட்டும் வேண்டியுள்ளன. ஆடை, அணி, உண்டி, பெண்டிர், மலரணை, மணம், மெல்லிலை, நல்லிசை ஆகிய போகம் எட்டும் போக விரும்புவார் உளரோ? எண் மங்கலம், எண் மணம், எட்டுருவம், எட்டுச்சத்தி, எட்டறம், எட்டு மலர்கள், எட்டுறுப்பு வணக்கம் எட்டு மூலம், எட்டுக் கூலம், எண்குணம், எட்டுப்பத்தி, எட்டு வித்தியேசுரர், எட்டுத் தொழில், எட்டிசைக் கரணம், எட்டு மெய்ப்பாடு, எட்டு வனப்பு, எட்டுப் பொருள்கோள் முதலியவற்றை யெட்டும் ஆற்றல் உடையோர் எட்டுடன் போர் புரிவரோ? எண்டோள் முக்கண் எம்மானைத் தம் மானாகக்கொண்டவர்க்கு எட்டிலும் மூன்றிலும் மட்டிலாப் பற்றுண்டு. வாழ்விலும் பிறிதிலும் எட்டுண்டு.

'பதினெட்டு' என்பதும் ஒரு சிறந்த எண், எழுத்திலே மெய் பதினெட்டு, பொய் அல்ல. பன்னீருயிரும், கஙவும், சஞவும், டணவும் ஆகிய பதினெட்டும் அந்தணர் குலமாவன. சொல்லிலே,

'சீர்மணி பரிதி யானை திருநிலம் உலகு திங்கள்
கார்மலை சொல்எ ழுத்துக் கங்கைநீர் கடல்பூத் தேர்பொன்
ஏர்உறும் இவைமு வாறும் இதிற்பரி யாயப் பேரும்
ஆரும்மங் கலச்சொல் செய்யுள் ஆய்ந்துமுன் வைக்க நன்றாம்'

என்று பதினெட்டு மங்கலச் சொல்லை எடுத்துத் தொகுத்துச் சூடாமணி நிகண்டு பாடாநின்றது. பதினெட்டு மொழிகளே

தொன்றுதொட்டுக் கொள்ளப்பட்டன. இந் நாளில் ஆயிரம் ஆகப் பெருகினும் 'மூவறுமொழி' யே யாவராலும் ஓவறக் கொண்டுரைக்கப்பட்டன. (நன்னூல், பெயரியல் 16 பார்க்க). திருத்தக்க தேவரும் 'மூவறுமொழி' என்றார். பொருளிலே பதினெட்டாக வகையுற்று நிலவுவன பல பல உள்ளன.

ஆகாசர், உரகர், சித்தர், காந்தருவர், விஞ்சையர், பசாசர், தாரகை, போகபூமியோர், கின்னரர், கிம்புருடர், சுரர், அசுரர், பூதர், முனிவர், கருடர், இராக்கதர், இயக்கர், சாரணர் என்று அடியார்க்கு நல்லார் எழுதிய பதினெட்டும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துரையுள்ளும் காணப்படும் அப் 'பதினெண்கணனும் ஏத்தவும்படும்' நம் சிவபெருமானுக்கு 'நுதல் வண்ணம்' ஆகிய 'அப்பிறை'. இதனினும் சைவத்துக்கும் பதினெட்டுக்கும் உள்ள 'ஞானசம்பந்தம்' வேறு வேண்டுமோ?

ஆகம ருத்திர பேதம் பதினெட்டு :— விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அநலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம். அப் பதினெட்டாகமங்களையும் பரமசிவன்பால் உபதேசம் பெற்ற அநாதி ருத்திரர் முதலியவரும் பதினெண்மர்.

புராணம் பதினெட்டு; உப புராணம் பதினெட்டு; சைவம், பவிடியம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமநம், மற்சம், கூர்மம், பிரமாண்டம், பிரமம், பதுமம், காருடம், நாரதம், விண்டு, பாகவதம், ஆக்கிநேயம், பிரமகைவர்த்தம் என்னும் புராணமும் பதினெட்டு, நாரசிங்கம், சநற்குமாரம், நாரதீயம், சிவதன்மம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசநம், காளிகம் வாருணம், சாம்பேசம், பராசரம், பார்க்கவம், காபிலம், மாநவம், வாசிட்டலைங்கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம் என்னும் உபபுராணமும் பதினெட்டு, தருமநூலும் பதினெட்டு ; அவை, மநு, பிரகற்பதி, தக்கர்,

இயமர், கௌதமர், அங்கிரர், யாஞ்ஞுவற்கியர், பிரசேதர், சாதாதபர், பராசரர், சம்வர்த்தர், உசநர், சங்கர், இலிகிதர், அத்திரி, விண்டு, ஆபத்தம்பர், ஆரிதர் என்னும் பதினேண் முனிவரால் செய்யப்பட்ட அறநூல் (ஸ்மிருதி)கள். சைவத் திற்குரிய சோமசம்புபத்ததி முதலியனவும் பதினேட்டு, 'பதினேட்டுப்பத்ததி' என்று, சீகாழித் தாண்டவராயர் திருவாசகத்துக்கு எழுதியருளிய வியாக்கியானத்திலும் குறித்தார். 'ஒருமைக்கண் ஈரொன்பான் (பதினேட்டு) உரைவிரிப்ப வுணர்பொருள்' என்பது வீரசோழியத்தின் யாப்பதிகாரத் துரையில் ஒரு பாடலின் அடியிற் காணப்படு கின்றது. அது போதிநிழற் புநிதனைக் குறித்தது.

பதினேண் சித்தர், பதினேண்கணேசர், பதினேண் குடிமை, பதினேண் கூலம், பதினேண் மூலம், பதினேண் வேள்வி, பதினேண் கீழ்க்கணக்கு, பதினேண் மேற்கணக்கு முதலியவற்றை விரிவஞ்சி எழுதாது விட்டாம். பதினேண் (அட்டாதச) வித்தைகள் :- நான்கு வேதங்கள் ; ஆறு வேதாங்கங்கள் ; ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்த வேதம் என்னும் உபவேதம் நான்கு, மீமாஞ்சை, நியாயம், மிருதி, புராணம் என்னும் நான்கு, பதினேண் வழக்குப் பொருள் :- கடன் கோடல், உபநிதி, கூடி மேம்படல், வாங்கியதைக் கோடாமை, உடன்பட்டும் செய்யாமை, கூலி கோடாமை, உரிமையின்றியும் விற்றல், விற்றுக்கோடாமை, கொண்டு உள்ளம் ஒப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நிலவழக்கு, மாதர் ஆடவர் அறம், தாயபாகம், வன்செயல், சொற்கொடுமை, ஒறுத்தற் கொடுமை, சூது என்பனவும் பிறவும்.

அளவை நூலுட் கூறும் உவமைப்போலியும் பதினேட்டு; அகப்பொருளிலே கற்பியல் வகையும் பதினேட்டு; இரவுக் குறியிடையீட்டு விரியும் பதினேட்டு.

கலம்பகம் என்னும் ஒருவகைச் சின்னூலின் உறுப்பும் பதினேட்டு, முன்னத்தின் உணருங் கிளவியும் பதினேட்டு,

உடற் குற்றமும் பதினெட்டு, 'பட்டறி கேட்டறி பத்தேட்டு இறுத்தறி' என்ற பழமொழியிலும் பதினெட்டு, காவிரியில் ஆடிப் பதினெட்டாம் பெருக்கும், பாரதப் பதினெட்டாம் போரும் யார்க்குத் தெரியா? கல்வெட்டுரை :- கடவுளுக்குப் படைக்கும் நிவேதனம் பத்தேட்டுக் குத்தலரிசி. பதினெட்டு நிலத்துக்கும் தருமையில் எழுந்தருளி நலம்பல நல்கிவரும் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகைக்கும் பதினெட்டுக் கைகள், அத்தேவி உடுக்கும் புடவையின் முழமும் பதினெட்டு. பதினெட்டு முழப்புடவையின் நலம் பழம் பாட்டிகளுக்கு அன்றி இக்காலத்துப் புதுக்குமரிகளுக்குத் தெரியாது.

ஆதி பரமாசாரியர் அருள் வழியில் அவர் ஞான பீடத்தை அலங்கரித்து வீற்றிருந்து இத் தருமையம்பதியில் பரிபூரணமான சந்நிதானங்களின் குருமூர்த்தங்கள் பதினெட்டு.

சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், நீர்ப்படைக்காதையில், "உயிர்த்தொகை உண்ட வொன்பதிற்றிரட்டியென்று யாண்டும், மதியும், நாளும், கடிகையும், ஈண்டுநீர் ஞாலம் கூட்டி எண்கொள", என்னும் அடிகளுக்கு எழுதிய உரை, "தேவாசுர யுத்தம் பதினெட்டு ஆண்டிலும், ராம-ராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவ - துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், சேங்குட்டுவனும், கனகவிசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தன', என்றுள்ளது.

கோள், துணிவு, துரோகம், பொறாமை. பிறர்குணம் கண்டுதாளாமை, பிறர் பொருள் வெளவல், காரணம் இன்றிக் கடிதல், வைதல், வேட்டை, சூது, பகற்றூக்கம், பயனில கூறல், பிறனில் விழைதல், கள்ளுண்ணல், கூத்தாடல், இசை பாடல், இயங்கொட்ட விரும்புதல், வீணே திரிதல் என்னும் பதினெட்டும் பதினெட்டை வெறுப்போர்க்கும் உள்ளன.

'அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரர்க்குச்
செப்பிய நாலெட்டிற் றெய்விகம் — இப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.,

இது பழந்தனிப்பாடல். இதில் உள்ள மூவாறு (பதினெட்டு), சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவ்வுலகில் விளங்கிய காலத்தின் எல்லையைக்குறிப்பது. அது சுந்தரருக்கும் (வசுந்)தரைக்கும் இருந்த தொடர்பின் அளவை அறிவிப்பது.

நம் 'ஞானசம்பந்தம்' தோன்றிப் பதினேழாண்டாயின இதைத் தோற்றியவர் திருப்பெயர் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்பது. அவர்கள் இருபத்துநான்காமவராகக் குருபீடத்தில் எழுந்தருளியாண்ட வர்கள். அப்பீடத்தின் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசார்யர், அத் திருப்பெயரிலும் ஒற்றுநீக்கப் பதினெட்டுத் திருவெழுத்துள்ளன.

அவர்கள் காட்டிய நெறி சைவநெறி. நமது சைவ நெறியோ திருநெறி. அத் திருநெறியை உணர்த்தும் மொழி தமிழும் சம்ஸ்கிருதமும். திருநெறியை உணர்த்தும் தமிழ் 'திருநெறிய தமிழ்', தெய்வத் தமிழ், அத் 'திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிது'. அவ் வெளிமையை அருமையின்றிப் பெறுவித்து விளங்குவது 'ஞானசம்பந்தம்'. ஞானசம்பந்தம் இன்றித் திருவடி கிட்டாது. ஞானமே திரு. ஞான நெறியே திருநெறி. ஞானசம்பந்தமே திருநெறியின் பயன் ஆகும்.

இந்த 'ஞானசம்பந்தம்' திருஞானசம்பந்தம், குரு ஞானசம்பந்தம், சண்முக ஞானசம்பந்தம், தருமையின் பெருமைக்குக் காரணமான அருமைக் குருமணி 24 ஆவது மகாசந்நிதானம், அந்தச் சீலத்திரு, சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களே, எங்கும் எவரும் என்றும் நடத்திக்காட்ட முடியாத பெரிய முறையில்

உயரிய திட்டத்தில் - திறத்தில், சிறப்பில், ஒழுங்கில், சைவாகம நெறியில் 'மெய்கண்டான் மாநாடு' நடத்தி இன்பம் எய்துவித்தும் எய்தியும் உலகம் புகழ ஓங்கி விளங்கி யருள்கின்றார்கள் சிவரூபத்தில்.

அவர்கள் திருவுள்ளத்தின் நிறைந்து பொங்கி வழிந்த கருணையின் வடிவமே இந்த 'ஞானசம்பந்தம்.' இஃது ஒன்று தானோ ? 'வேத சிவாகம பாடசாலை,' 'தேவாரப் பாடசாலை' முதலியனவும் அதன் வடிவே ஆகும். வேத வித்தகர் எத்தனைபேர் ? சிவாகம ஞானிகள் எத்துணையர் ? திருமுறைப் பண்ணிசைவாணர் எவ்வளவினர் ? சைவ சமயவளர்ச்சிக்குச் செய்த நலங்களுக்கு அளவுண்டோ ? தமிழகம் முழுவதும் தருமைக்கே பெருமை தந்தது எம் முகத்தால் ? நம் தெய்வச் சண்முகத்தால் அன்றி வேறு எம் முகத்தாலும் அல்ல. அஷ்ட மூர்த்திகளாகிய ஆதீனப் புலவர் எல்லாரும் அந்தக் குருநாதர் கருணாமிர்தம் உண்டு வாழும் பண்டைய நல்வினைப் பயனுகர்வோரே. அப் பெருமானார் தேடித்தந்த வைப்புச்செல்வமே இப்பொழுது தருமையையும் கமலையையும் மதுரையையும் ஆண்டும், குமரிமுதல் அமரநாதம் முடிய உள்ள தெய்வஸ்தானங்களை யெல்லாம் தரிசித்தும், திருக்கோயில்களின் விளக்கத்தைப் பெருக்கியும், வழிபாட்டு வகையில் ஆயிரமும் அணுவாக இலக்கமும் கோடியுமாக அருச்சனையை வளர்த்தும், பக்தி அவசத்தால் தங்கக்கவசங்கள் செய்வித்தும் அணிவித்தும், கண்டும் பேரானந்தம் கொண்டும், கல்லூரி முதலியவை வைத்துச் சைவமும் தமிழும் சம்ஸ்க்ருதமும் தழைத்தோங்கச் செய்தும் தருமைக் குருபீடத்தில் மகேசுரமூர்த்தம் (25) ஆக அணி செய்தருளும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள். அவர்கள், தம் வழிமுதல் வைத்த திருநெறிவழாது இந்த "ஞானசம்பந்தம்" ஆண்டு தோறும் உலகவர் உணர்வில் வளர்ந்து, முற்குறித்த அஷ்டாதச வித்தைகளையும் போதித்துவரும் வண்ணம் திரு வுள்ளம் கொண்டருளினார்கள்.

இதுவரை "பாலராய்" இலங்கி இப்பதினெட்டாவது ஆண்டுமுதல், குமாரராகும் இஞ் 'ஞானசம்பந்தம்' இது வரையில் உணர்த்தி வந்த திருநெறிப் பொருளுடன் பதினெண் வித்தைப்பொருளையும் பிற உயரிய பொருள்களை யும் உணர்த்திவரும்.

திருமுறையில் இல்லாத பொருளை எம்முறையிலும் என்றும் எவரும் உரைக்க முடியாது. சைவ சித்தாந்த வுண்மைகளும் திருமுறைப் பொருள்களின் அடிப்படையில் தோன்றின என்பது மெய்யுணர்ந்தோர் கொள்கை.

'இல்லா முலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்
நல்லாய் உளவாமால்'

என்று மெய்கண்டதேவர் அருளியதும்

'காண்பார் யார்கொல் காட்டாக்கால் எனும்
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானத்தின்
ஆட்பாலவர்க்கருள் என்பதை அறியே'

என்று (இருபா இருபஃது 2 :- 31 - 34) அருணந்திதேவ நாயனார் அருளியதும்,

'உள்ளம் உருகில் உடனாவர்' (திருவுந்தியார் 7) எனத் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் அருளியதும், திரு முறையே மெய்கண்ட நூற்பொருள்கட்கு அடிப்படை என் னும் உண்மைக்குச் சான்றாகும்.

அவற்றையே 'அருமறையாகமம் முதல் நூல் அனைத் தும் உரைக்கையினால் அளப்பரிதாம் அப்பொருளை அரன் அருளால் அணுக்கள்' இந்த 'ஞானசம்பந்தம்' இதழ்களில் தாம் அறிந்த அளவில் தருவர்கள். அதனால் இதனை இது வரை பெற்றுக் கற்றுவரும் புண்ணியர்களும் இனிப் பெறக் கருதும் புண்ணியர்களும் இத்தனையாண்டுகளாக இவ் வெளி யீட்டினோடு 'ஞானசம்பந்தம்' கொண்டு உறவாடிய வண் ணம் இனியும் கொண்டு உறவாடி இன்புறுவார்களாக.

‘ நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞான சம்பந்தனுக்குலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின்று ஆடும்
அங்கணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக்காவினிற் கண்டுகொண் டேனே ’

என்றும்,

‘ நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கு
அரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி யேத்து உகப்பானைத்
தொண்டனேன் அறியாமை அறிந்து
கல்லியல் மனத்தைக் கசிவித்துக்
கழலடி காட்டி என் களைகளை அறுக்கும்
வல்லியல் வானவர் வணங்க நின்றானை
வலிவலந்தனில் வந்து கண்டேனே ’

என்றும் ‘ ஊனம் இல் காழிதன்னுள் உயர்ஞானசம்பந்தற்கு அன்று ஞானம் அருள் புரிந்தான் ’ என்றும் உணர்த்தியவற்றால், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முன்னை இருவர் திருமுறைச் சிறப்பைக் குறித்தருளினார்கள். அந்த ‘ ஞானசம்பந்தம் ’ இந்த ‘ ஞானசம்பந்தம் ’ பெற்றுக் கற்போர்க்கு இனிதும் எளிதுமாய்க் கிடைக்கும். இது திண்ணம். வாழ்க குருமகா சந்நிதானம். வாழ்க தருமையாதீனம். வளர்க ஞானசம்பந்தம். வாழ்க உலகெலாம். மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம். இதைக் கற்போரெல்லாரும் இனிது வாழ்க.

---

## வழுவாதிருக்க வரம் தர வேண்டும்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல்வைத்த தீவண்ணனே.

# பதினேழாண்டுகளில் நாம்.....

**சேஞ்சோற்கோண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனர்.**

ஞானசம்பந்தம் பதினேழாண்டு நிறைவு பெறுகிறது. சமய உலகில் ஒரு அறப்புரட்சியைப் பதினேழாண்டுகளாக நம் பத்திரிகை ஆற்றி வருகிறது. தருமை யாதீனத்தின் அருள் நிழலில் தமிழ் கூறுநல் உலகம் எங்கணும் சென்று அன்பர்களுக்கு ஞானசம்பந்தத்தை உண்டாக்கி வருகிறது. இந்நிலையில் இப்பத்திரிகை உலகுக்குத் தந்திருக்கும் புதிய செய்திகளை எண்ணிப் பார்த்தல் வேணடும். அஃது ஒரு புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரும். இனிச் செய்ய இருக் கும் தோண்டுகளுக்கு இவ்வேண்ணம் தூண்டுகோலாகும் என்ற நம்பிக்கையோடு அச் செய்திகளையும், அவற்ருல் விளைந்த விளைவுகளையும், இங்கு எண்ணிப்பார்ப்போம்.

கடந்த இவ்வாண்டுகளில் நம் பத்திரிகையில் கட்டுரை வழங்கிய கட்டுரை யாசிரியர் பலர். அரும்போருள் உதவிய அறிஞர் பலர். அரிய நூல் வேளியிட்ட தோண்டுகளும் அநேகம். தத்துவ உணர்வு தலைப்படவேண்டும் மக்கள் சமுதாயம் என்பதற்காக முதல் இதழ் தோடங்கிச் சீரிய தத்துவக் கட்டுரைகளையும் நாம் உலகுக்குத் தந்திருக்கிறோம்.

விநாயகரை வணங்கிக்கோண்டு வினையாற்றத் தோடங்கு தலே நம் நேறி, 'பான்மை தரு செய்யதமிழ் பார்மிசை விளங்க' ஆனைமுகத்தானைப் பரவுதல் வேண்டுமல்லவா? பதினேழு ஆண்டுகளுக்கு முன் முதல் இதழிலேயே 'விநாயகர் தத்துவம்' வேளியிட்ட விழுப்பம் நம் இதழுக் குண்டு. சேப்பறைச் சுவாமிகள் எழுதி வைத்திருந்த தேவார உரைகளைத் தமிழுலகுக்குத் தரத்தோடங்கினேம். அது முதலாகச் சேந்தமிழ் உலகம் சேப்பறைச் சுவாமிகளைப் பற்றியும், அவர்கள் கண்ட சேம்போருளைப் பற்றியும் சிறிது வேகமாகச் சிந்திக்கத் தோடங்கியது என்பதை இங்குப் பேருமிதத்துடன் தேரிவித்துக் கோள்கின்றேம். இந்த

வகையில் உலகேலாம் என்ற பேரியபுராணத் தோடக்கத் திருப்பாடற்குச் சுவாமிகள் கண்ட உரையை நம் இதழ் வேளியிட்டது.

அதுமட்டுமா ? அரியநூல் வேளியீடுகளில், தருக்க சங்கிரகம், தேவிமான்மியம், சிவாஷ்டகம், தோல்காப்பியம் கல்லாடர் உரை, ஞானவரண விளக்கமும் அரும்பத விவேகமும், என்னும் பழம் பேருநூல்களை வேளியிட்ட பேருமை நமக்குரியதாகும். அரிய யாத்திரை நூல்கள் தமிழில் இல்லாத குறை நீக்கி நம் தருமை யாதீனம் பல்லாண்டுகளாக வேளியிட்டு வருதல் யாவரும் அறிந்ததே. அவ்வகையில், இப்போது அருளரசு புரிந்து வரும் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் தம்முடைய அடியவர் பலரோடு சேய்தருளிய திருக்கேதார யாத்திரை, ஆதீன வேளியீடாக வந்தது. அதனை எல்லோரும் — வேளியீடு கிடைக்காதவரும் — படித்து இன்புறும் போருட்டுத் திங்கள் தோறும் ஒவ்வோரு பகுதியாக வேளியிட்டு நம் பத்திரிகை யாத்திரை நூல் தோண்டும் புரிந்திருக்கிறது என்பது இங்கே குறிப்பிடத் தகுந்தது. அன்றியும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அவ்வப்போது புரிந்து வரும் யாத்திரைகளைச் சிறந்த இலக்கிய முறையில் கட்டுரை களாக்கித் தரும் சீரிய பணியையும் நம் பத்திரிகை மேற்கோண்டுள்ளமையைப் பாராட்டி அன்பர்கள் பலரும் அவ்வப்போது நம் காரியாலயத்துக்கு எழுதியுள்ளமை இங்கே அறியத்தக்கதாகும். நம் பத்திரிகை வாயிலாகத் திருக் கேதார யாத்திரையில் விருப்பம் மீதூர்ந்து, பின்னர் திருக்கேதாரம் சேன்று தரிசித்து மீண்ட அன்பர்களும் பலர் உண்டு.

சைவ சித்தாந்த சங்கிரகம், திருக்கோவையார், சிவபூஜா தத்துவம், நோன்புவிளக்கம், தத்துவவிளக்கம், திருநேறி விளக்கம், கந்தரலங்காரப் போருட்சிறப்பு, திருத்தோண்டர்

புராண மந்திரங்கள், இருளும் ஒளியும், உருத்திராக்கப் பெருமை, திருநீற்றுப் பெருமை, என்பன முதலிய தலைப்புக் களில் பல இதழ்களில் நமது சமய நுண்பொருள்கள் விளக்கப்பெற்றுள்ளன. தத்துவம் தெரியாமல் விழாக்களைக் கொண்டாடி வந்த தமிழ்நாட்டு ஆடவரும் பெண்டிரும் பொருள் உணர்ந்து நோன்பு நோற்கவும், விழாக்களைக் கொண்டாடவும் முற்பட்டனர். தமிழ்க் குடும்பங்கள்தோறும் தத்துவ விளக்கம் தெரிந்து நோன்பு நோற்கும் வழக்கத்தை நம் பத்திரிகை விளைத்துள்ளது. இஃது ஒரு அரிய சாதனை என்பதை வெளிப்படக் கூறத் தேவையில்லை.

கல்வெட்டுத் துறையிற் சிறந்தபல அறிஞர்கள் அவ் வப்போது தாம் கண்டுணர்ந்த பேருண்மைகளை விளக்க, அறிவுலகத்தின் மதிப்பைப்பெற்ற நம் பத்திரிகையைத் துணைக்கொண்டுள்ளார்கள். ஆதீன தேவஸ்தானங்களே யன்றி ஏனைய திருக்கோவிற் கல்வெட்டுக்கள் தக்கபல ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு ஆராய்ந்து வெளிப்படுத்தப் பெற்றன. திருக்கடவூர், திருக்குறுக்கை, சிதம்பரம், திருவையாறு முதலிய சரித்திரப் புகழ்பெற்ற திருக்கோவிற் கலவெட்டுக்களைப் பற்றிய தெளிவுமிக்க பல புதுப்பொருள் கள் வரலாற்றுலகில் ஒரு பரபரப்பை விளைத்தன. ஆராய்ச்சி உலகில் இக்குறிப்புக்களால் விளைந்த பலன்களைப் பலரும் நன்கறிவர்.

நம் சான்றோர் கவிதைகளை நம்மிற் கற்றவரும் கல்லாத வரும் நன்கு விளங்கிக்கொள்ள எழில்மிக்க சித்திரங்கள் நன்கு பயன்படும் என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளம் பற்றினார்கள். அத்திருவுள்ளத்தால் சித்திரக்கலைஞர் சித்திரங்கள் நம் இதழில் இடம் கொண்டன. குமரகுருபரர் கவிச் சித்திரமும், கந்தபுராணக் கவிச்சித்திர மும் நம் ஆதீனப் புலவர். திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் வரையப்பட்ட இனிய பகுதிகள். கவிதைகளை எளியநடையில் இவர்கள் விளக்கவும், அதற்கேற்ற எழி லோவியத்தை ஓவியர் ஒருவர் அமைக்கவும் இந்தத்துறை

பத்திரிகைச் சிறப்பில்மிக்கதெனப் பல்லோரானும் பாராட்டுப் பெற்றது. இதனுல் பயன்பெற்ருேரும் பலராவர்.

சித்தாந்த சாத்திர நுண்பொருள் காண்பதில் தமிழ் நாட்டிற் சிறந்தோரும் நம் ஆதீனப் புலவர்களுமான திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், க. வச்சிரவேல் முதலியார். அருணைவடிவேல் முதலியார்; சம்பந்தசரணலயர் (சி. கே. சுப்பிரமணிய முதலியார்) முதலியோரால் சீரிய கட்டுரைகளையும் இவ்விதழ் திங்கள்தோறும் வெளியிட்டு வருகிறது. தோத்திரத்துறையிலும் தக்க பல நல்லறிஞர் களின் விளக்கங்களைத் தாங்கி வரும் பெருமை இவ்வரிய பத்திரிகைக் குரியதாகும்.

சைவச் சார்பான ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றையும் ஏற்று அறிவுலகினர் அனைவர் பாராட்டையும் பெற நம் இதழ் தவறவில்லை. ஆங்கிலவரும் நம் இதழ்ச் செய்தியால் நம் கருத்துக்களை உணரவேண்டிய அவசியத்தை முன்னிட்டே இந்த ஆங்கிலக் கட்டுரைகள் ஆக்கி வெளியிடப்பெற்றன. திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதிய 'The Vedas and the Agamas', திரு. எம். பாலசுப்ரமணிய முதலியார் எழுதிய 'Essence of Saivism', 'The four stages in the worship of Lord Siva' என்ற திரு. வேங்கடராமையா அவர்கள் கட்டுரை, M. அருணசல முதலியார் எழுதிய 'Panchakrithyam', திரு. சச்சிதானந்தம் பிள்ளை எழுதிய 'The Philosophy of Saiva Siddhantha', என்பவையும், திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையின் 'The four paths', திரு. R. சண்முகசுந்தரம் செட்டியார் எழுதிய 'Cleanings from Saiva Siddhanta', திரு. A. முத்தையா பிள்ளையின் 'Siddhanta Saivam and its merits', திரு. காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளையின் 'Thillai vazh Anthanar', திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எழுதிய 'Siva-prakasam', ஆகியவையும் நம் பத்திரிகையில் வந்து உலகப் புகழ்மிக்க கட்டுரைகள். இன்னும், The Ancient

Tamils and the vedic faith' என்ற B. N. கிருஷ்ண மூர்த்தி சர்மாவின் கட்டுரையும், 'Sivagnana botham or Rahu and kethu' என்ற வீரபத்திர முதலியார் கட்டுரையும், நம் பத்திரிகையில் வந்த பழம் பெரும் சிந்தனைக் கட்டுரைகளாகும். இவையன்றி உலகப் புகழ்பெற்ற ஏனைய தமிழர்களின் ஆங்கிலக் கட்டுரைகள் வெளியிடப் பெற்று உள்ளன. இவற்றால் அறிவுலகத்தின் கண்ணோட்டத்தை நம் சமயத்தின் பக்கம் நன்கு திருப்பியிருக்கிறோம் நாம்.

கதைகள் கருத்தைக் கவர்வனவாக எழுதி அவற்றின் வாயிலாகவும் தொண்டு புரிதல் வேண்டும் என்ற குறிக்கோளுடன், மனித உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சிறு கதைகள் பலவும் எழுதப்பெற்று இவ்விதழில் வெளி வந்துள்ளன. நீண்ட புதினம் (Novel) ஒன்றும் நம்நாட்டுப் பண்பை விளக்கு முறையில் வரவேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டபடி, திரு. சோ. சிங்காரவேலனாரால் "மாசில் வீணை" என்ற வரலாற்றுப் புதினம் ஒன்றையும் எழுதச்செய்து நமது பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. இலக்கிய கட்டுரைகள் பலவும், ஏனைய சில ஓரங்க நாடகங்களும், வந்திருக்கின்றன. பஞ்ச பூதத் தலங்களைப்பற்றியும், அட்டவீரட்டங்களைப் பற்றியும் புராண வரலாறுகளைத் தழுவிய விளக்கக் கட்டுரைகளை வெளியிட்டுச் சமய மரபு பேணவும் ஞானசம்பந்தம் மிக்க பணி செய்திருக்கின்றது.

நம் ஆதீனச் செய்திகள் அழகுமிக்க நடையில் அவ்வத் திங்கள்தோறும் வழங்கப்பட்டுவருகின்றன. ஆதீனத்தில் என்னென்ன பணிகள் செய்யப்படுகின்றன என்று அறியாதவர்களுக்கு இது நல்ல ஆதாரமாக நின்று பயன்பட்டு வருவதாகும். ஆதீனத்தைச் சேர்ந்த தேவஸ்தானச் செய்திகளும் அவற்றைச் சார்ந்து வெளிவந்துள்ளன. மருத்துவம், பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி என்ற பகுதிகளில் அரிய பல செய்திகளைக் கட்டுரை வடிவில் தந்திருக்கிறோம்.

கோசார பலன் என்ற தலைப்பில் திருவிடைமருதூர் திரு. முத்து ஜோதிடர் அவர்களைக்கொண்டு மாதந்தோறும் ஒவ்வொருவர் எதிர்காலமும் விளக்கப்பட்டு வருகிறது. இதனால் தங்கள் வாழ்வில் வரக்கூடிய இன்பத் துன்பங்களை முன் கூட்டித் தெரிந்துகொண்டு அவற்றிற்குரிய பரிகாரங் கண்டு செவ்வனே வாழ்ந்து வருவோர் பலராவர்.

சைவமேயன்றி வைணவச் சார்பான செய்திகளும் உண்மைகளும் கட்டுரை வடிவில் தரப்பட்டு வந்திருக்கின்றன. அவற்றிற் சிறந்த பெருமக்களால் அவைபற்றி ஆராயப்பெற்ற முடிபுகள் பெரும்பாலோரால் பாராட்டுப் பெற்றவை. வடமொழி வாணர்களால் வடமொழி, ஆகமத்திற் கூறப்பெற்ற கருத்துக்கள் எடுத்து மொழியப் பெற்றுள்ளன. கலை உணர்ச்சி விளக்கங்களும், அறிவியற் கட்டுரைகளும், வாழ்வியலுக்கேற்ற உண்மைகளும், அவ்வப்போது வெளியிடப்பெற்றுள்ளன. சில பழக்கங்களின் மெய்ம்மை தெரியாமல் அவற்றைத் தவறென்று வாதம் புரிவோர் கொள்கை எவ்வளவு மூடக் கொள்கை என்பதை அறிவியல் அடிப்படையில் விளக்கும் தத்துவக் கட்டுரைகளால் பயன்பெற்றவர் பல்லோர்.

இலக்கணத்தில் உரையிலும், சூத்திரத்திலும் தவறுகளாக இதுகாறும் அச்சிடப் பெற்றுவந்தவையும், கலித்தொகைபோன்ற சங்க இலக்கியங்களில் தவறிய பகுதிகளாகவும் வந்திருப்பவையும் பன்மொழிப் புலவர் திரு. வேங்கடராஜுலு ரெட்டியார் போன்ற பழம்பெரும் புலவர்களால் எழுதப்பெற்ற திருத்தக் கட்டுரைகளும் ஏனைய இலக்கணப் பொருள் பற்றிய கட்டுரைகளும் இவ்விதழில் வெளியிடப் பெற்றுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களில் உயிர் வகைகள் பற்றிய ஆய்வுக் கட்டுரையும் அரிய பல உண்மைகளை நிலைநிறுத்திச் செல்வதாகும். இவற்றின் வாயிலாகவும், மொழி இயலுக்கு நம் பத்திரிகை ஆற்றிவரும் தொண்டு பலர் பாராட்டைப் பெற்று வருகின்றமை இங்கே நினைக்கத் தக்கதாகும்.

இவ்வண்ணம் பல திறப்பட்ட துறையிலும் பணியாற்றி வரும் இப்பத்திரிகையின் பதினேழாண்டுகள் பணி முறையிலே மக்களின் ஆர்வம் எந்த அளவுக்குப் பெருகியிருக்கிறதென்ற செய்தியை அறிகின்றோம். முதலில் எண்ணிக்கைக் குறைவாயிருந்த நம் பத்திரிகை வரவரக் கூடிக்கொண்டே வந்துள்ளது. ஆனாலும் இந்த எண்ணிக்கை போதாது. இன்னும் பெருகவேண்டும். இதற்கு அமைந்த ஆண்டுக் கட்டணம் மிகவும் குறைவாகவே உள்ளது அச்சிடும் கூலிக்கு மூன்று மடங்கு குறைவாக இருந்தபோதிலும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணையால் இந்த அளவுக்கு பத்திரிகைக்கு வளர்ச்சி இருக்கிறது தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் ஞானசம்பந்தம் விளங்க வேண்டும் என்பது எங்கள் அவா. தமிழ் நாட்டுக்கு வெளியே வாழும் தமிழர் ஒவ்வொருவர் கையிலும் ஞானசம்பந்தம் இருக்கவேண்டும். ஞானசம்பந்தம் இல்லாத தமிழன் உலகில்லேயே இருக்கக்கூடாது. தமிழர் கலாச்சாரத்துக்கு உலகில் தனியிடம் வேண்டுமென்றால் அது கட்சிச்சார்பற்ற, இலக்கிய சமயத் தொடர்பான பத்திரிகை ஒன்றால்தான் முடியும் என்பது எங்கள் அசையாத நம்பிக்கை.

---

## ஞானசம்பந்தம் பெற வேண்டுக

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.

எண்ணா தமர ரிரக்கப் பரவையுள் நஞ்சையுண்டாய்
திண்ணா ரசுரர் திரிபுரந் தீயெழச் செற்றவனே
பண்ணார்ந் தமைந்த பொருள்கள் பயில்பா திரிப்புலியூர்க்
கண்ணார் நுதலாய் கழல்நங் கருத்தி லுடையனவே.

(திருநாவுக்கரசர்)

சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலயத்தின்

திருமுறை வகுப்பின் 5 ஆவது ஆண்டுவிழா.

சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலயத்தில்

சமஸ்க்ருத வகுப்புத் துவக்கவிழா
வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
ஆசிரியர் ஸ்ரீ கோபால சர்மா, திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலியவர்கள்.

# முப்பொருள் விளக்கம்

தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர்,
சித்தாந்தக் கலைமணி.
வித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 17, இதழ் 12, பக்கம் 803 இன் தொடர்ச்சி)

மாணுக்கன் :

அற்றேல், "இரண்டும் அன்று என விடுப்பின்; சொல்லொணுமை (அநிர்வசநீயம்)" என்னுங் குற்றமாமன்ருே?

ஆசிரியர் :

ஆகாது; "அறியப்படும் பொருள் அன்று" என்பதற்குக் "கருவி யறிவு உயிரறிவுகளான் அறியப்படுவதன்று" என்பதும், "அறியப்படாத பொருள் அன்று" என்பதற்கு, "ஒருவாற்ருனும் அறியப்படாதபொருளன்று" என்பதுமே கருத்தாகலின்.

மாணுக்கன் :

அற்றேல், "இரண்டும் அன்று" எனின், இன்னது ஆம் என்பது எங்ஙனம்?

ஆசிரியர் :

இரண்டும் அன்று எனவே, "இறை அறியப்படாத பொருளுந்தான்; அறியப்படும் பொருளுந்தான்" என்றே கூறுதல் வேண்டும்.

மாணுக்கன் :

அங்ஙனங் கூறின், "ஒருதலைப்படாமை (அநேகாந்தம்)" என்னும் குற்றம் எய்துமன்ருே?

ஆசிரியர் :

எய்தாது ; என்னையெனின், "அறியப்படாத போருள்" என்பதற்குக் "கருவியறிவு உயிரறிவுகளான் அறியப்படாத போருள்" என்பதும், "அறியப்படும் போருள்" என்பதற்கு, 'அருளறிவான் அறியப்படும் போருள்" என்பதுமே கருத்தாகலின்,

" உணருரு அசத்தெனின் ; உணராது இன்மையின்,
இருதிறன் அல்லது சிவசத் தாம்என
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே "

என்பது சிவஞானபோதம். (சூத்திரம் ௬.)

" அறிவுறும் போருளோ ஈசன் ? அறிவுரு தவனோ ? என்னின்
அறிபோருள் அசித்த சத்தாம்; அறியாத தின்றும் ; எங்கும்
சேறிசிவம் இரண்டு மின்றிச் சித்தோடு சத்தாய் நிற்கும் ;
நேறிதருஞ் சத்தின் முன்னர் அசத்தெலாம் நின்றி டாவே "

என்பது சிவஞான சித்தி. (சூத்திரம் ௬. க )

மாணுக்கன் :

அற்றேல், "இறை, எவ்வாற்ருனும் அறியப்படாத போருளாகாது, ஒருவாற்ருன் அறியப்படும் போருளேயாம்" என்பதற்கு அளவை யாது ?

ஆசிரியர் :

" ஒன்றுங் குறியே குறியாத லால்அதனுக்
கோன்றுங் குறியோன் றிலாமையினுல் — ஒன்ருே
டுவமிக்க லாவதுவுந் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேஇதற்குச் சான்று "

(திருக்களிற்றுப்படியார் - 10) என்றருளியவாறு,

" ஏதுக்க ளாலும் எடுத்தமோழி யாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்விட்டுளன் எங்கள் சோதி "

(திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் தேவாரம் - திருப்பாசுரம் 5.)

எனவும்,

"புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும் போய்என்பனே"

(திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்-தனித்திருவிருத்தம்-௨. ரு.)

எனவும்,

"கற்றுளவான் கனியாய கண்ணுதலைக் கருத்தார
உற்றுளனும் ஒருவனைமுன் இருவர்நினைந் தினிதேத்தப்
பெற்றுளனும் பெருமையனைப் பெரிதடியேன் கையகன்றிட்
டேற்றுளனாய்ப் பிரிந்திருக்கேன்"

(சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் ருயக-கூ)

எனவும்,

"அரைசனே அன்பர்க்கு! அடியனே னுடைய
அப்பனே! ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
போய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே!"

"குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே!
சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே!
இறைவனே! நீஎன் உடலிடங் கொண்டாய்;
இனிஉன்னை என்இரக்கேனே.

"இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே!

"தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்!
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்;
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்;
யான்இதற் கிலனொர்கைம் மாறே"

(திருவாசகம் - கோயிற்றிருப் பதிகம்)

எனவும் பிறவிடத்தும் இன்னேரன்னவாய்க் காணப்படும் அருளாளரது அநுபவமே அதற்குச் சான்ருமன்றிச் சுட்டிறந் தறிவதாகிய அரனைச் சுட்டியறிவதாகிய பிறிதோரளவையினுல் உணர்த்துதல் அரிது, ஆயினும், ஒருவாற்ருன் உனக்கு உணர்த்துவாம்.

இறையின்பத்தினை விரும்பாது உலக இன்பத்தினை விரும்பி அதற்குரிய நெறியில் முயன்றும், தத்தந் தமரை அந்நெறி யானே முயல்வித்தும் வருவார் எஞ்ஞான்றும் இலராகாது உளராயினுற்போலவே உலக இன்பத்தினை விரும்பாது இறை யின்பத்தினை விரும்பி அதற்குரிய நெறியில் முயன்றும், தத்தந் தமரை அந்நெறியானே முயல்வித்தும் வருவாரும் எஞ்ஞான்றும் இலராகாது உளராகியே நிற்றலான், "இறை எவ்வாற்ருனும் அறியப்படாத பொருளாகாது, ஒருவாற்ருன் அறியப்படும் பொருளேயாம்" என்பது பெறப்படும். அஃது எங்ஙனமெனின் இறையை அறிந்து அநுபவித்தற்குச் செய்யும் முயற்சிக்குப் பயன் ஒன்றும் இலதாயின் அம்முயற்சி நிலைபெற்று நடவா தொழிந்திடுமன்ருே? அங்ஙனமின்றி அஃது என்றும் நிலை பெற்று நடத்தலான், அம்முயற்சியான் இறை அறிந்தநுபவிக்கற் பாலதேயாம் என்க.

(தொடரும்.)

குமரகுருபரன் ஆண்டு சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அவர்களது திருப்பெயர்கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# ஒளிவளர் விளக்கு

**வித்துவான், திரு. கோ. இளையபெருமாள் அவர்கள்**
தலைமைத் தமிழாசிரியர்,
சுப்பிரமணிய சாஸ்திரியார் உயர்நிலைப்பள்ளி, ஆரணி.

(ஆசிரியப்பா)

ஒளிவளர் விளக்கே ஒளிவளர் விளக்கே
உலகெலாம் போற்றும் ஒளிவளர் விளக்கே
திங்கள் ஞாயிறு தீயின் வடிவாய்
எங்கணும் பேரொளி எழுப்பும் விளக்கே
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியின் வடிவாய்த் தோன்றும் விளக்கே
யானென தென்னும் செருக்கினை அறுப்பவர்
வானவர்க் குயர்ந்த வாழ்வுறு வாரெனும்
ஞான மூட்டி நல்லொளி காட்டிக்
கருணை மலையாய்க் கவினுறத் திகழும்
அருணை மலையாய் அவிரொளி விளக்கே
அன்பெனும் அகலில் ஆர்வநெய் யூற்றி
இன்புறு சிந்தை இடுதிரி யாக
ஏற்றிச் சான்றோர் இன்புறக் கண்டே
அருந்தமிழ் தனைய அருந்தமிழ்ப் பாக்களால்
போற்றிப் பரவி நாற்றிசை யும்புகழ்
சோதியே சுடரே சூழொளி விளக்கே
உடலும் உயிரும் உள்ளமும் உருகக்
கடலெனத் திரண்டு கார்த்திகைத் திருநாள்
அரகர வென்றே அன்பர்கள் போற்றிப்
பரவிடும் நின்சீர் பகரற் காமோ?
புறவிரு ளன்றிப் பொலிவுறக் காண்பார்
அகவிருள் நீக்கி அருளும் அருணை
மலைமிசை விளக்காய் மாண்புற எவர்க்கும்
தெளியக் காட்டித் திகழும் ஒளிவளர்
விளக்கே என்றும் விளங்குக நன்றே.

வெண்பா

உள்ளக் கவலை ஒழிந்தேன் உறுபிறவி
வெள்ளத் தழுந்தேன் வினையற்றேன் - உள்ளுமுயர்
சீர்த்திமிகுந் தோங்கும் திருவருணை வெற்பொளிரும்
கார்த்திகை தீபத்தைக் கண்டு.

# ஐந்திர வ்யாகரணம்

நாவல்பாக்கம், வித்துவான், ஸ்ரீ தேவநாதாச்சாரியார் அவர்கள்
சரஸ்வதிமகால், தஞ்சாவூர்.

(மலர் 17, இதழ் 12, பக்கம் 828 இன் தொடர்ச்சி)

வாக்தேவதையைப்பற்றின மந்திரங்கள் சிலவற்றை இங்குத் தருவது இன்றியமையாதது. வியாகரணம் செய்யப்பட்ட வாக் எது? என்னும் கேள்விகளுக்கு இம்மந்திரங்கள் தக்கவிடை யளிக்கும்.

[1] देवीं वाचमजनयन्त देवाः तां विश्वरूपाः पशवो वदन्ति ।
सा नो मन्द्रेषमूर्जं दुहाना धेनुर्वागस्मानुपसुष्टुतैतु ॥

தேவீம் வாசமஜநயந்த தேவா: தாம் விச்வரூபா: பசவோ வதந்தி ।
ஸா நோ மந்த்ரேஷமூர்ஜந் துஹாநா தேனுர்வாகஸ்மானுபஸுஷ்டு
தைது ॥

(கருத்து) — இந்த [2] மாத்யமிகீ வாக், எல்லாப் பிராணி களுள்ளும் இருந்து தர்மத்தைச் சொல்லுகின்றது என்னும் மேன்மை இதனால் விளக்கப்படுகிறது. சிறந்த ஒளியுடைய இந்த மாத்யமிகீ வாக்கை மாத்யமிகர்களான தேவர்கள் தோற்று விக்கின்றனர். அதைத் திருந்திய சொற்களுள்ளவையும் திருந் தாத சொற்களுள்ளவையுமான (மானிடர்களும் - மற்றவைகளும்) எல்லாப் பிராணிகளும் சொல்கின்றன. அதை முன்னிட்டுக் கொண்டே வார்த்தைகள் வழங்க வேண்டியிருத்தலான். அந்த வாக்தேவியானவள், மதத்தைக் கொடுப்பவளாகவும் அல்லது துதியினால் மகிழ்ச்சியைத் தருபவளாகவும், மழையைத் தந்து அதன்மூலம் உணவையும் அதன் ரஸத்தையும் பெருக்கிக் கொண்டு, நம்மால் துதிக்கப்பட்டவளாய் நம்மை அணுக வேண்டும். வேண்டியவற்றை யெல்லாம் வர்ஷிப்பதற்காக

---

[1] ருக்வேதம் 8-100-11, தைத். ப்ரா. 2-4-6-10, நிருக்தம் 11-99.

[2] பரா, பச்யந்தீ - மத்யமா - வைகரீ என்னும் நான்கு வகையான வாக்கினுடைய உட்பிரிவுகளுள் மூன்றாவது மாத்யமிகீ எனப்படுவது

என்றபடி. இந்த மந்திரத்துக்கு இதே கருத்து "யாஸ்க"ரால் தமது நிருக்தத்தில் 11-29ல் விவரிக்கப்பட்டுள்ளது.

[1] यद्वाग्वदन्त्यविचेतनानि राष्ट्री देवानां निषसाद मन्द्रा ।
चतस्र ऊर्जं दुदुहे पयाँसि क्वस्विदस्याः परमं जगाम ॥

யத்வாக்வதந்த்யவிசேதநாநி ராஷ்ட்ரீ தேவாநாம் நிஷஸாத மந்த்ரா ।
சதஸ்ர ஊர்ஜம் துதுஹே பயாம்ஸி க்வஸ்விதஸ்யா: பரமஞ்ஜகாம ॥

(கருத்து) — ஒளி மிக்கதும், தேவர்களுக்கு மதத்தைத் தருவதுமாகிய வாக் அறிவுக்கெட்டாத பொருள்களையும் அறிவித்துக்கொண்டு எப்பொழுது யாகத்தில் அமர்கின்றதோ; அப்பொழுது நான்கு திக்குகளிலும் உணவையும் அதற்குக் காரணமான தண்ணீரையும் கறக்கின்றது. இந்த வாக்குக்குச் சொந்தமான உயர்ந்த பொருள் எங்கு சென்றது? (காணக்கூட வில்லை யென்றபடி) யாஸ்கருடைய நிருக்தத்தில் 11-28ல் இப்பொருள் உரைக்கப்பட்டுள்ளது.

[2] चत्वारि वाक् परिमिता पदानि तानि विदुर्ब्राह्मणा ये मनीषिणः ।
गुहा त्रीणि निहिता नेङ्गयन्ति तुरीयं वाचो मनुष्या वदन्ति ॥

சத்வாரி வாக் பரிமிதா பதாநி தாநி விதுர்ப்ராம்மணாயே மநீஷிண: ।
குஹா த்ரீணி நிஹிதா நேங்கயந்தி துரீயம் வாசோ மனுஷ்யாவதந்தி ॥

(கருத்து) — வாக்கினுடைய பாதங்கள் (நாலிலொரு பங்கு =பாதம்) [3] நான்கென அளவிடப்பட்டுள்ளன. சிறந்த அறிவு

---

[1] ருக்வேதம் 8-110-10, தைத், ப்ரா. 2-4-6-11,
நிருக்தம் 11-28, ப்ருஹத்தேவதா 6-121.

[2] ருக்வேதம் 1-164-45, சதபதப்ரா 4-1-3-17
தைத். ப்ரா. 2-8-8-5. அதர்வவே. 9-10-27
தலவகாரப்ரா. 1-7-3. நிருக்தம் 13-9.

[3] இங்கு, வேதம் வல்லார்களும், இலக்கணக்காரர்களும், யாகம் அனுஷ்டிக்கிறவர்களும், நிருக்தக்காரர்களும், பௌராணிகர்களும், வேதாந்திகளும் யோகிகளு(விஞ்ஞானிகளு)ம் தத்தம் வழியில் இந்த மந்திரத்துக்குப் பொருள் பகருவர். அவற்றின் விரிவை பாஷ்யக்ரந்தத்தில் காணலாம், யாவற்றுக்கும் பொதுவான முறையில் எம்மால் பொருள் விளக்கப்பட்டது.

படைத்த அந்தணர்கள் அவற்றை நன்கறிவர். அவற்றுள் மூன்று பாதங்கள் குஹையில் (புலனுகாத இடத்தில்) வைக்கப் பட்டுள்ளன. வெளியில் தெரியா. நான்காவது பாதத்தை மட்டும், (வாக்கின் மேன்மையை! யுணர்ந்தவர்களும் உணராத வர்களுமாகிய) மனிதர்கள் பேசுகின்றனர்.

[1] अनन्तामन्तादधिनिर्मितां महीं यस्यां देवा अदधुर्भोजनानि ।
एकाक्षरां द्विपदाँषट्पदाञ्च वाचं देवा उपजीवन्ति विश्वे ॥

அநந்தாமந்தாததிநிர்மதாம் மஹீம் யஸ்யாந்தேவாஅததுர்போஜநாநி
ஏகாக்ஷராம் த்விபதாம் ஷட்பதாஞ்ச வாசந்தேவா உபஜீவந்தி
விச்வே ॥

(கருத்து) — [2] இந்திரன் முதலான தேவர்கள் எந்த "வாக்கில் தங்களது உணவை வைத்துள்ளனரோ அந்த வாக்கையே தேவர்கள் யாவரும் ஆச்ரயித்திருக்கின்றனர். அந்த 'வாக்' எல்லையில்லாதது. முந்திய ஊழியின் முடிவில் எல்லாவற்றையும் தனது திருமேனியில் இழுத்துத் தரித்துநின்ற இறைவனிடமிருந்து தோன்றியது. மிகவும் பெரியது. ஓங்காரமெனும் ஓரெழுத்து வடிவமானது. பண்படுத்தப்பட்டதும் பண்படுத்தப் படாததுமான இருவகையானது. ஆறு வகையான கிளைகளாகப் பிரிந்தது.

[3] वाचन्देवा उपजीवन्ति विश्वे वाचं गंधर्वाः पशवो मनुष्याः ।
वाचीमा विश्वा भुवनान्यर्पिता सा नो हवं जुषतामिन्द्रपत्नी ॥

வாசந்தேவா உபஜீவந்தி விச்வே வாசங்கந்தர்வா: பசவோ
மனுஷ்யா: ।
வாசீமா விச்வா புவநாந்யர்ப்பிதா ஸா நோ ஹவஞ்ஜுஷதா
மிந்த்ரபத்நீ ॥

---

[1] தைத். ப்ரா. 2-8-8-4. 4.

[2] இக்கருத்து பட்டபாஸ்கர பாஷ்யத்தை அனுசரித்து எழுதப் பட்டது. இதற்கு, மேலும் சிறந்த முறையில் மற்றவர்களால் கருத்து உரைக்கப்பட்டுள்ளது.

[3] தைத். ப்ரா. 2-8-8-4. 4.

(கருத்து) — (ஹோம காலங்களில் வழங்கப்படும்) வாக்கையே எல்லாத் தேவர்களும் ஆச்ரயித்துள்ளனர். கந்தருவர்களும் விலங்குகளும் மனிதர்களும் அப்படியே. இவ்வுலகங்கள் யாவும் (உலகங்களிலுள்ள எல்லா உயிர் வகைகளும்) வாக்கிலேயே வைக்கப்பட்டுள்ளன. இந்திரனைக் காப்பவளான இந்த வாக் நமது ஹவிஸ்ஸை ஏற்றுக்கொள்ளட்டும்.

[1] वागक्षरं प्रथमजा ऋतस्य वेदानां मातामृतस्य नाभिः ।
सा नो जुषाणोपयज्ञमागात् अवन्ती देवी सुहवा मे अस्तु ॥

வாகக்ஷரம் ப்ரதமஜா ருதஸ்ய வேதாநாம் மாதாம்ருதஸ்ய நாபி: ।
ஸா நோ ஜுஷாணோபயஜ்ஞமாகாத் அவந்தீ தேவீ ஸுஹவா
மே அஸ்து ॥

(கருத்து) — இந்த 'வாக்' அழிவற்றது. யஜ்ஞத்தை முதன் முதலில் தோற்றுவித்தது. "மந்திரங்களினின்றும் யாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன" என்கிறது அதர்வணவேதம் வேதங்களின் தாய். தெய்விகத் தன்மையைத் தரவல்லது. அந்த 'வாக்' அன்புள்ள தாய் நமது யாகத்திற்கு வரவேண்டும். நம்மைக் காக்கும் (வாக்) தேவி எமக்கு ஸுகமாக அழைக்கக் கூடியவளாக இருக்கட்டும்.

[2] यामृषयो मन्त्रकृतो मनीषिणः अन्वैच्छन्देवास्तपसा श्रमेण ।
तां देवीं वाचँहविषा यजामहे सा नो दधातु सुकृतस्य लोके ॥

யாம்ருஷயோ மந்த்ரக்ருதோ மநீஷிண: அந்வைச்சந்தேவாஸ்த
பஸா ச்ரமேண ।
தாம் தேவீம் வாசம் ஹவிஷா யஜாமஹே ஸா நோ ததாது
ஸுக்ருதஸ்ய லோகே ॥

(கருத்து) — எந்த வாக் தேவியை, மந்திரங்களைக் கண்ட மேதாவிகளான மகரிஷிகளும் தேவர்களும் கடுந்தவம் புரிந்து கஷ்டப்பட்டுப் பெற்றனரோ, அந்த வாக்தேவியை ஹவிஸ்ஸைக் கொடுத்து யாகம் செய்து வழிபடுகின்றோம். அந்த வாக் நம்மைப் புண்ணிய லோகங்களில் வைக்கட்டும்.

(தொடரும்)

---

[1] தைத். ப்ரா. 2-8-8-5. [2] தைத். ப்ரா. 2-8-8-5a

# சில திருத்தங்கள்

பன்மொழிப் புலவர்
திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்
(ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப்புலவர், சென்னைப் பல்கலைக் கழகம்)

பழைய தமிழ் நூல்கள் பலவற்றை அரிதின் முயன்று வெளியிட்டு உதவியவர்கள் மஹாமஹோபாத்யாய, டாக்டர், வே. சாமிநாதையரவர்களும் ராவ்பகதூர், சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களுமே என்பது தமிழுலகு அறிந்த செய்தியே. அக்காலத்தில், முதன்முதல் வெளியிட்ட நூல்களில் பொருட் பேறில்லாத பாடங்களும் வேறு சில பிழைகளும் இருத்தல் இயல்பே. ஐயரவர்கள் பதிப்பித்த பழைய நூல்களெல்லாம் மீண்டும் சிலமுறை பதிப்பிக்கப்பட்டுள்ளனவாகலின், அவை முதலிலிருந்த பிழைகள் நீக்கப்பெற்றுத் திருத்தமும்விளக்கமும் அடைந்திருக்கின்றன. பிள்ளையவர்கள் வெளியிட்ட நூல்கள் மறுமுறை அவர்களால் வெளிவந்தில.

பிள்ளையவர்கள் பதிப்பித்த பழைய நூல்களுள் தொல்காப் பியம் ஒன்று. அதன் ஒவ்வோர் அதிகாரமும் இப்போது பல ராலும் வெளியிடப்பட்டுளது. அவற்றுள் எழுத்ததிகாரம், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் இருமுறை பதிப்பிக்கப்பட்டுளது; 1937 இல் யாழ்ப்பாணம் பொன்னையா பிள்ளையவர்களால் வெளியிடப்பட்டுளது. அப் பதிப்பில், வித்துவான், கணேசையரவர்களின் ஆராய்ச்சிக் குறிப்பு அமைந்துளது. அன்றியும், அப்புத்தகம் உயர்ந்த காகிதத்தில் நல்ல அச்சில் திருத்தமாகப் பதிப்பிக்கப்பட்டுளது. இப்புத்தகத்தை வியாபார நோக்கம் இன்றிச்சிறந்த நன்னோக்கத் தோடு பதிப்பித்துள்ள திரு. பொன்னையா பிள்ளையவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது. ஆயின், இத்தகைய சிறந்த பதிப்பில் தாமோதரம் பிள்ளையவர்கள் முதற்பதிப்புப் புத்த கத்தில் இருந்த பெரும் பிழைகள் நீக்கப்படாதிருத்தல் வருந்தத் தக்க தொன்றே.

அப்பிழைகளைத் தெரிவிப்பின் கற்கும் மாணுக்கருக்குப் பயன்படும் என்னும் நோக்கத்தான் அவற்றை ஈண்டுக் குறிக் கின்றேன் :

"அளவு நிறையும் ஆயிய றிரியா" (குற் - 72)

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், 'திரியா என்றதனுன், ஒரு பதிற்றுக்கலம் இருபதிற்றுக்கலம் என்னுந் தோடக்கத்தன வற்றின்கண், இன்னின் அகரம் றகரமாகத்திரிந்து இரட்டுதலும் கோள்க' என்று பதிப்பிக்கப்பட்டுளது. 'இன்' என்பதன்கண் அகரம் உளதா? அகரம் றகரமாகத் திரியுமா? 'இன்னி னகரம் றகரமாகத் திரிந்து இரட்டுதலும் கோள்க' என்று இருத்தல் வேண்டும் என்பது யாருக்கும் எளிதிற் புலனுகக் கூடியதே. 'இன்னி னகரம்' என்றிருந்ததனை 'இன்னின் அகரம்' என்று பிரித்துப் பதிப்பித்தது தவறு என்பது கூற வேண்டாவன்றே?

"அழனே னிறுதிகெட வல்லெழுத்து மிகுமே" (புள்ளி - 59)

என்னுஞ் சூத்திரத்தின் கருத்துரை, 'இது வேற்றுமைக்கண் அகரம் திரியாது கெடுக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது' என்று பதிப்பிக்கப்பட்டுளது. ஈண்டு 'வேற்றுமைக்கண் னகரம் திரியாது கெடுக' என்றிருத்தல் வேண்டும் என்பது எளிதின் அறியப்படும்.

"னகார விறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் போருட்கே"

என்பது, னகாரம் திரிதற்கு விதி, 'அழனே னிறுதி' என்னுஞ் சூத்திரம் ஈறு கெடுதற்கு விதி கூறுதலின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்ததாயிற்று.

"போன்னேன் கிளவி" (புள்ளி - 61)

என்னுஞ் சூத்திரத்தின் இறுதியில், 'இன்னும் இதனுனே' 'போலனறுந் தேரியல்', 'போலமல ராவிரை' என்ருற்போல 'மகாரங் கேட்டுப் பிறகணத்து முடிதலுங் கோள்க' என்று பதிப்பிக்கப்பட்டுளது. ஈண்டு, பிறகணம் என்றது மேன் கணத்தை. போலம் என்னுஞ் சோல்லில் மகரம் கேடின் அது, போல என்றிருக்கும். அதன்முன், நறுந்தேரியல் என்பது வந்து புணரின், போலநறுந்தேரியல் என்றே யிருக்கும்; போல னறுந் தேரியல் என்ருகாதன்றே? ஈண்டு நகர னகரங்களின் வேறுபாடு கருதாதது தவறு. இவ்வாறு, வேறு சில உள. அவை அமயம் வாய்ப்புழி எழுதப்படும்.

---

# அன்பின் வெற்றி

வித்துவான் சொ. சிங்காரவேலனார்,
தமிழ்ப்பேராசிரியர், ஆதீன பல்கலைக் கல்லூரி, தருமபுரம்,

## முதற்படலம்

### மாலை நேரம்

மாலை நேரம்; மாங்குடி யதனில்
சோலை நடுவே சோக்கிடும் கட்டிடம்
பள்ளிக் கூடம்; பைந்தமிழ்ச் சிறுவர்
துள்ளி ஆடினர் தோன்றிடும் வெளியினில்.
நல்ல சூழ்நிலை; நல்ல ஆசிரியர்;
வல்ல ஆசிரியர்; வாழ்க்கையின் தேவை
கல்வி முறையெனக் கருத்தில் ஊன்றியோர்;
பல்வித்மாகப் பாலர்கள் மனத்தில்
ஏட்டுப் படிப்பையும், இயன்ற எழுத்தையும்
பாட்டுச் சுவையையும், நாட்டுப் பற்றையும்
நலமாய் விளக்கும் நல்லவர்; அதனால்
பலமாய் மிளிர்ந்தது பள்ளிக் கூடம்! 1

மணியும் அடித்தது: மாணவர் ஓடினர்;
அணி அணியாக அழகிய சீட்டுப்போல்!
ஆசிரியர்கள் அனைவரும் சென்றபின்
வீசிடும் தென்றலில் மெல்ல நடந்தனள்
பள்ளி ஆசிரியை பான்மொழி என்பாள்.
ஒள்ளிய விழிகள்; தெள்ளிய நோக்கு!
கையில் சீரிய தமிழ்பயில் நூல்கள்;
வெய்யில் சாய்ந்து விழுந்தது மேற்கே;
மஞ்சள் கதிரா மலிந்தனன் பகலோன்;
வஞ்சி நடந்தனள் வல்விரைவாக! 2

திருக்குளக் கரையினில் பான்மொழி வந்தனள்;
ஒருநல்ல இளைஞன்; யாரவன்? அந்த
தென்னை மரத்தின் தோப்பினுள் ளிருந்து
புன்னகை யோடு தோன்றினன் முன்னே;

'பான்மொழி! பள்ளி முடிந்ததா?' என்றான்;
'நான்கரை மணிக்கெலாம் நலமாய் முடிந்தது'
என்றாள் சிரித்து ஏந்திழை; இளைஞன்
ஒன்றிய சிரிப்போடு நடந்தனன்; சொன்னான்;
'நானுமோர் சிறுவனாய் இருக்கலா காதா?
பான்மொழி கேட்கும் பாக்கியம் பெறுவேன்'
என்றனன்; 'அத்தான்! ஏளனம் ஏன்? ஆம்;
இன்று கல்லூரி இல்லையா?' என்றனள்
வேல்விழி, அவனும் விருப்பமாய்ப் பார்த்து
'பால்மொழி கேட்கப் பரிவுடன் கொண்டு
விடுமுறை எடுத்தேன்' என்றான் விரைவாய்!
தொடுமுறை நெருங்கிடும் வேளையில், யாரோ
வருவது கண்டு அகன்றனன்; 'வரட்டுமா?
நேரமாகிற தென நடந்தனள் நேரிழை;
தூர விலகிடும் தோற்றம் கண்டே
தன்னுயிர் வடிவுடன் மன்னுதல் போல
எண்ணினன் அந்த இளைஞனும்;
தன்னிடம் நோக்கித் தனிநடந்தனனே. 3

## இரண்டாம் படலம்

### உளரிய ஓநாய்

விளக்கேற்றி வைக்கும் நேரம்,
விரைந்தனள் வீட்டுக் குள்ளே;
விளக்கேற்றி வைத்தாள்; வீதி
விரைவாகக் கூட்டிக் கோலம்
மளக்கென்று போட்டாள்; நீல
மயிலொன்று சுழலல் போலே!
'விளக்கேற்றி விட்டேன், அம்மா!
விழைந்தென்ன உண்ணுகின்றாய்? 4

நொய்யிட்டுக் கஞ்சி வைப்பேன்
நொடியினில்' என்றாள்; நெற்றிக்
கைவைத்த போது அன்னை
கடுஞ்சுரம் கண்டாள்; 'அம்மா!
பொய்யின்று புகன்றதேனோ?
புகைந்ததே காய்ச்சல்! ஈது
உய்கின்ற வகையைக் காண
உறுவன்நான் மருத்துவர்பால்? 5

'பால்மொழி! ஒன்றும் வேண்டாம்;
பயமில்லை; பசியும் இல்லை;
சால்புள்ள உனது தந்தை
சாக்காட்டால் அன்றோ' நீயும்
ஆல்போன்று தழைத்து நல்ல
அறுகுபோல் வேரும் ஓடி
மேல்நின்று மணமும் கொண்டு
மிளிர்ந்திடும் வயதில் இன்று, 6

பள்ளியில் அலுவல் பார்க்கும்
பாரத்தைப் பெற்றாய், கண்ணே!
உள்ளினால் நெஞ்சும் சோரும்;
உருகிடும் என்ன செய்வேன்?
சொல்லற்ற நோயில் நானும்
சுழன்றனன்' என்றாள்; கேட்டு
'கொள்ளற்க துன்பம், அம்மா!
குறைவிலா வாழ்வு கொண்டோம்; 7

குறையென்ன அம்மா! வீணே
குழப்பிக்கொண் டுலையேல்;' என்றாள்;
நிறைவுற்ற மனத்தி னோடு
நிமிர்ந்திடும் சுடரைத் தூண்டி
முறையுற்ற உணவு செய்ய
முனைந்தனள் அடுக்களைக்குள்
அறையுற்ற அன்னை மீண்டும்
அழைத்தனள்: ஓடி வந்தாள்! 8

'பான்மொழி! உனது மாமன்
பதவியில் அமைந்தும், நல்ல
நூன்முறை வழுவாதோன் போல்
நுணங்கியோர் போற்ற வின்று
மேன்முறை வாழுகின்றான்;
மீண்டும்நீ அவனைக் கண்டு
நான்சொன்ன வகையிற் செய்தால்
நம்துயர் போகுமன்றோ?' 9

என்றனள் அன்னை; கேட்டு
இதயத்திற் சினமும் கொண்டு
'ஒன்றிடும் பழியின் சின்னம்;
உலுத்தனும்; கொடியோன்; நன்மை

கோன்றிடும் குணத்தின் மிக்கோன்;
குமரனை மீட்டும் கண்டு
ஒன்றுமிங் காகா தம்மா!' —
உரைத்தனள், உருத்த சொல்லாள்! 10

கதவினை யாரோ தட்டும்
சத்தத்தைக் காதாற் கேட்டுக்
கதவினைத் திறந்தாள்; அங்கு
கையினில் மலர்த்தட்டோடு
கதுமென நுழைந்தாள்; தீமை
கண்ணிய மனத்தான்! கண்டு
அதிர்ந்தனள் நெஞ்சமேனும்
'அம்மா! நம் மாமா!' என்றாள்! 11

'பார்வதீ!' என்று கூறிப்
படுக்கையின் அருகு சென்று
நேர்நின்று கண்ணீர் சிந்தி
நிறைந்திடும் பொய்யன்போடு
'பார்வதி! பகை மறந்தேன்;
படுகின்றாய் துயரமென்றால்,
யார்க்கிங்குக் கவலை? அஃது
எனக்கன்றோ அருமைத் தங்காய்! 12

அறியாமை தூண்ட நானும்
அன்றுன்னை ஆத்திரத்தால்,
செறியாமை பேசிவிட்டேன்;
சினவாதே! உனது அண்ணன்
அறியாமை ஒழிந்துவிட்டான்
அகன்றன பொய்மை எல்லாம்;
நெறியாக நின்னைக் காண
நேர்வந்தேன்' என்றான் பொய்யோன்! 13

வயதான வஞ்சகத்தோன்
வார்த்தையை நெஞ்சில் எண்ணாள்,
அயலாகி நின்றாள்; அங்கு
அறம் கண்டாள்; அதற்குள்ளாக
உயர்வான அன்பைக் கண்டு
உளம்பொங்கிக் களிப்பினோடு
துயரங்கள் நீங்கித் தங்கை
துளைந்தனள் மகிழ்ச்சி வெள்ளம்! 14

'அண்ணா! உன் அன்பை என்ன
சொல்லுவேன்? அன்பு சான்ற
கண்ணான செல்வம் என்றன்
பான்மொழிக் கனியை நல்ல
கண்ணாளன் ஒருவனுக்குக்
கடிமணம் செய்துவிட்டால்
என்னாவி இனிதே ஏகும்'
என்றனள் கண்ணீரோடு. 15

'பான்மொழி! நானிருக்கப்
பயங்கொள்வதேனோ தங்கை!
தேன்மொழி அவட்குத் தக்க
திருமணம் முடிப்பேன் இங்கு!
வான்கண்ட நிலவு போல
வாழ்குவள்; மணாளன் தன்னை
யானுமிங் கறுதியிட்டு
வைத்தனன்' என்றான் வஞ்சன்! 16

'அன்புக்கு என்ன சொல்வேன்?
ஆரந்தப்பிள்ளை?' என்றாள்;
'அன்பிற்கு இசைந்த தங்கை
ஆர்வேறு? நான்தான்' என்றான்!
'துன்புறு மனத்தாய்! கெட்ட
தூர்த்தனே! பண்பற்றோனே!
முன்புற்ற நரையின் முன்னா
முன்னினாய் இல்லறத்தை?' 17

எனச் சீறிவிழுந்தாள் தங்கை;
இதுகாறும் வாளா நின்றாள்
முனம் வந்தாள்; 'இதயம் தன்னை
முழுமூடக் கொள்கை மூடித்
தனம்பெற்ற செருக்கால் இன்று
தகர்த்தனை, இனிய நெஞ்சை!
பிணம் உன்றன் கிழட்டுமூளை
பிறழ்ந்ததா?' என மொழிந்தாள்! 18

நரைவாய்த்த தலைதான்; காட்டு
நரிவாய்த்த மனந்தான்; மேனி
திரை வாய்த்த தங்கம்; வாழ்வு
தினவந்த புலியோ நீதான்?

கறைவாய்த்த நெஞ்சினாலே
　　கருதினாய்! அடடே! இந்த
முறைவாய்த்த மாமனுக்கு
　　முதுமையில் மணமா!" என்றாள்! 19

உள்ளத்தே அவமானத்தால்
　　ஒடுங்கிய குமரனென்னும்
கள்ளத்தான் கனன்று நோக்கிக்
　　கதுமென விரைந்தான்; ஐயோ!
உள்ளத்தான் தூய்மைமிக்க
　　ஒருவரிவ் வுலகந்தன்னில்
மேள்ளத்தாம் வாழுதற்கும்
　　மிகுதடை வளர்தல் காண்பீர்! 20

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapura Adhinam**
**Velur Sri Vaithianathaswami Devasthanam,**
**Vaithiswarankoil.**

I had the unique privilage of worshipping Lord Vaithiyanatha and Muthukumaraswamy and Divine Mother ihyanayagi; the moment, I entered the presence in the temple. I had a feeling of Divinity itself Ruling: everything around the temple from the outer praharam to sanctum sanctorium is so clean. tidy and aweinspiring it is a pleasure to worship in such surroundings - I learn from what little I have personally seen of the administration, that this is typical of all Devasthanams under the able management and trusteeship of Revered Paramacharya who adorns the titular throne at Dharmapuram. I once again pray for being afforded such a wonderful opportunity of worship. In sharp contract to many shrine in North, the cleanliness and facilities for worshipper offered here are so striking and deserve special mention. My thanks to Swamiji and his staff here.

(Sd.) Shankar, M. V.
Engineer, Western Railway,
Bombay. 23—10—58.

# நாட்குறிப்பு

ஸ்ரீமத். சம்பந்தசரணாலயத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
சேக்கிழார் நிலையம், கோயம்புத்தூர்.

நாட்குறிப்பும் மாதக் குறிப்புத்தாள்களும் வருடக் குறிப்புத் தாள்களும் அலங்காரமாக நமது வீடுகளில் சுவர்களில் மாட்டி வைத்திருக்கிறோம். ஆண்டு கழிந்தால் ஆண்டுத்தாள்கள் போய்விடுகின்றன. அவைகளில் ஏதாவது சித்திரங்கள் இருந் தால் அவற்றை மட்டும் கத்தரித்துச் சேமித்து வைக்கிறோம், மாதத்தாள்கள் அவ்வம் மாதங்கள் கழிந்தால் கழிந்துவிடு கின்றன. நாட்குறிப்புக்கள் (Date Block) ஒவ்வொன்றாக ஒவ்வொரு நாட்கழிவில் கிழித்தெறியப்படுகின்றன. நாட்கழிவை யும் ஆண்டுக் கழிவையும் நினைவூட்டும் இவற்றைப்பற்றி வேறு சிந்தனை நம் நினைவில் எழுகின்றதில்லை. அவற்றைப்பற்றிச் சில கருத்துக்களைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது.

நிலையாமையைப் புகட்டும் நீதிநூல்கள் பல நமது தமிழ் இலக்கியத்தில் விளங்குகின்றன. 2000 - 3000 ஆண்டு களின் முன்னமே நிலையாமையை உலகுக்கு நம் முன்னோர்கள் எடுத்து வற்புறுத்தி உபதேசித்துள்ளனர். மேல்நாடுகள் என்று சொல்லப்படும் கீழ் நாடுகளில் இத்தகைய இலக்கியங்களும் உபதேசங்களும் மிகக் குறைவு. ஏறக்குறைய இல்லை என்றே சொல்லலாம்.

> " நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை யுடைத்திவ்வுலகு "

என்று திருக்குறள் இடித்துக் கூறுகிறது.

> " கிழக்கெழுந்த ஞாயிறு மேற்கே விழக்கண்டும்
> குழக்கன்று மூத்தெருதாய்ச் சிலநாளில் விழக்கண்டும்
> தேனுர் விளிவிலா மாந்தர் "

என்பது திருமூலர் திருமந்திரம்.

இந்த உபதேசங்களும் பயிற்சியுமில்லாத குறையால் அந் நாடுகள் வெறும் மிருகத்தன்மையில் வாழ்கின்றன. தத்தம் அழிவைத் தேடிக்கொள்வதுடன் உலகத்தின் அழிவையும் கருத்தாகக் கொள்கின்றன. நிலையாமையிலும் நிலையாமைக் குள்ளாகி அழிகின்றன. அவற்றைப் பார்த்து நமது அரசிய லாரும் அம்மிருக வாழ்க்கையே தமது குறிக்கோளாகக் கொண்டொழுகிப் பேசிவருகிறார்கள். மதச்சார்பற்ற சமூக அரசியலைத் தமது லட்சியமாக வைத்துள்ளார்கள் (Secular state) என்கிறார்கள். அதற்கு மிருகத் தன்மையின் மேற் போகாத வாழ்வையே லட்சியமாகவுடையது என்பதுதான் பொருள். நிலையாமையை உணர்ந்து ஒழுகினால் அந்த நிலை யில்லாத சுருங்கிய நாளில் நிலைத்த காரியங்களைச் செய்ய முற்படுவார்களன்றோ? நாடுகள் எல்லாம் அணுகுண்டுகள் சேர்ப்பதிலும் யுத்த தளவாடங்கள் குவிப்பதிலும் ஆட்களைச் சுட்டுக் குவிப்பதிலும் ஒன்றுக்கொன்று முனைந்து மார்தட்டிக் கொண்டு எழுகின்றன. நாட்டு மக்களும் சமாதான மென்ப தில்லாமல் வியாஜ்யமென்றும் மனு என்றும் "கேஸ்" என்றும் வழக்கே மேலிட்டுக் கச்சேரியும் கையுமாக அலைந்து திரிந்து விரோதங்களையும் பண விரயத்தையும் பெருக்கி நாள் கழிக் கின்றார்கள். வழக்குகளில் கட்சிக்காரர்களும் வக்கீல் என்னும் வழக்கறிஞர்களும் வாய்தாக் கேட்பதில் சலிப்பதில்லை. நீதி பதிகளும் பல காரணங்களுக்காக மாதக் கணக்காக வாய்தா போடுவதில் சலிக்கிறதில்லை. அவ்வாய்தாக்காலத்திற்குள் வாதி களும் பிரதிவாதிகளும் இறந்து படுகின்றார்கள். நீதிபதிகளும் மாறிவிடுகின்றார்கள். அவ்வாய்தாக்கள் வரையில் தாம்தாம் வாழ்வுடன் இருப்போமா என்பதைச் சிந்திக்கிறதில்லை. வார்சுகள் சேர்த்து வழக்கு நடைபெறுகிறது. இந்தச் சிந்தனையை அறவே மறந்துவிடுகின்றார்கள்.

நல்ல வழியிலோ தீய வழிகளிலோ பணம் சம்பாதிக்கிற வர்களும் பணம் ஈட்டும்வழியிலே கண்ணும் கருத்துமாக இருக் கிறார்களே ஒழிய அந்தப் பணத்தை அனுபவிக்கும் வரையில் தாம் உயிருடன் இருப்போமா என்பதைப்பற்றி நினைக்கிறதே யில்லை. எல்லாத் துறைகளிலும் இவ்வாறேதான் உலகம் நடந்துவருகிறது. "இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்ப ரென்றெண்ணவோ திடமில்லையே" என்று உபதேசித்தார்

தாயுமானுர். ஆங்கிலத்தில் ஒரு சிறு சம்பவம் கேட்கப்படுகிறது. ஒரு கட்சிக்காரன் ஒரு பெரிய வக்கீலிடம் சென்று ஒரு நல்ல புத்திமதி யோசனை சொல்லுங்கள் என்று கேட்டான். அதற்குரிய ஊதியமும் பீசும் (Fees) கொடுத்துவிட்டான். வக்கீல் அதற்கு "இன்றைக்குச் செய்யக்கூடியதை நாளைக் கென்று வாய்தா போட்டு ஒத்திவைக்காதே" "Dont put off till tomorrow what you can do today" என்று எழுதிக்கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு அவன் வீட்டுக்குப் போனுன். அவன் ஒரு விவசாயி. மாலைப்போதாய் விட்டது. சிறிது போதுமட்டும் இருந்தது. களத்தில் கதிர்கள் அறுத்து அடித்துக் காயவைத்திருந்தான். அதை நாளைக்கு எடுத்து (கிடங்கில்) பண்டகசாலையில் சேர்க்கலாமென்று நினைத்தான். வக்கீல் கொடுத்த ஆலோசனை நினைவுக்கு வந்தது. அதை எடுத்து வாசித்தான். மீதமிருக்கும் சிறிது நேரத்தில் மாசூலை எடுத்து இன்றைக்கே சேமித்துவிடலாம் என்று தீர்மானித்து அன்றைக்கே சேமித்துவிட்டான். அன்றிரவு மழை வந்துவிட்டது. வக்கீல் எழுதிய ஆலோசனையை எண்ணி மகிழ்ந்தான். அப்படிச் செய்யாவிட்டால் மாசூல் முழுதும் நனைந்து வெள்ளத்தில் அடித்துப்போய்ப் பெருத்த நஷ்டமடைந்திருப்பான் என்பது அந்த சம்பவம்.

இந்த நினைவை மக்களுக்கு ஊட்டுவதற்காக நமது நாட்டில் பஞ்சாங்கம் பண்டைநாள் முதலே நம் முன்னேர்கள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். கோயில்களில் நாடோறும் மாலையில் அம்மன் சந்நிதானங்களில் அடுத்த நாளைக்குரிய பஞ்சாங்கம் படிக்கப் படுகிறது. அது கவனிப்பாரில்லாமல் வெறும் சடங்களவில் நின்றுவிடுகிறது. அரச அரண்மனைகளிலும் சநாதனதர்மம் என்ற பண்டைய அறவழியில் ஒழுகும் நன்மக்கள் வீடுகளிலும் நாடோறும் பஞ்சாங்கம் படிக்கப்படுகிறது. பஞ்சாங்கம் என்ருல் (நாள்) வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்ற ஐந்தையும் காட்டுவதை அங்கமாகக்கொண்டதென்பது பொருள். யோகம் கரணம் என்றவற்றில் இந்நாளில் நம்பிக்கை குறைந்து வருகிறது. பொதுவாகவே பஞ்சாங்கங்களில் நம்பிக்கை குறைந்து வருகிறது. பொதாக்குறைக்குக் கறுப்புச்சட்டை (சனீசுவரனுக்குத்தான் கறுப்பு உடை விதிக்கப்பட்டுள்ளது) அணிந்துகொண்ட ஒரு கூட்டம் கிளம்பிப் பெருகிவருகிறது.

" கிழிந்த பஞ்சாங்கங்களை நம்பாதே " என்று அந்த மாக்களின் கூட்டம் கூவுகிறது. பஞ்சாங்கங்களை மக்கள் நாளடைவில் கிழிக்கிறார்களே ஒழிய அவை கிழிந்தபடியே அச்சிடுகிறதில்லை. புத்தகங்களைக் கிழிப்பதும் சுட்டெரிப்பதுமான வேலை அறிவு முதிராத சிறு பிள்ளைகளுக்கே உரியது. " பஞ்சாங்கம் பொய் என்றால் கிரகணத்தைப் பார் " என்று பழமொழி வழங்குகிறது.

பஞ்சாங்கங்கள் ஒருபுறமிருக்க, இந்நாளில் ஆண்டும், மாதமும் நாள்களுமாகக் கழிவதை நினைவூட்டத் தாள்கள் வழங்குகின்றன. Calendars என்பார்கள். முதலில் ஆண்டுத் தாள்கள் வந்தன. அவை அவற்றில் வெளிவரும் சித்திரங் களுக்காகவே இப்போது சுவர்களில் மாட்டிவைக்கப்படு கின்றன. அவற்றோடு நமது ஆயுளில் ஒரு வருடகாலங் கழிந்து விட்டதே என்று எண்ணுவாரில்லை. மாதத் தாள்களுமப்படியே தான். அந்தந்த மாதம் கழிந்ததும் அவ்வம் மாதத்தாளைக் கிழித்து எறிவார்களேயன்றி ஆயுளில் ஒரு மாதகாலம் தீர்ந்து போனதுபற்றிக் கவலைப்படுவாரில்லை. காலக்கழிவை நினை வூட்டுவதற்கு மக்களின் மந்தபுத்தியால் இவைகள் போதா என்று மேலும் இடித்துக் கூறுவதுபோல " ஏ ! மந்த மதியே ! என்னைக் கிழித்தெறிந்து வாளா இருக்கிறாயே ! உன் ஆயுளில் ஒரு நாள் கழிந்துவிட்டதே ! நேற்று என்ன நல்ல காரியஞ் செய்தாய் ! செய்யவேண்டியதைச் செய்தாயா ? என்று சொல்லி நினைவூட்டுவது நாடோறும் நாம் குறிக்கோளிலாது வீணே மறந்து கிழித்தெறியும் அந்த நாட்குறிப்புத்தாள். அந்த நாட்குறிப்பு நமது உடம்பாகிய மரத்தை அறுக்கும் வாள் என்கிறார் நாயனார். எப்படி வாளானது ஒவ்வோரு பல்லாகப் பதிந்து மரத்தை முழுவதும் அறுக்கிறதோ அதேபோல் ஒவ்வோருநாளும் நமது ஆயுளை அறுத்துத்தள்ளுகிறது.

" நாளென வொன்றுபோற்காட்டி யுயிரீரும்
வாளது ணர்வார்ப் பெறின் " — திருக்குறள்.

" உணர்வாரைப் பெற்றால் " என்றார் உணர்வார் அருமை என்பதுணர்த்துதற்கு.

" நாளார் வந்தணுகி நலியாமுன் " என்பது தேவாரம்.

# அத்திக்காய்

சித்தாந்தச் செல்வர்,
**திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தனூர் அவர்கள்**
திருவண்ணுமலை.

" வைகறைத் துயில் எழு " ஔவை மூதாட்டியின் திருவாக்கு. விடியற் காலையில் துயில் நீங்கி, இறைவனை இனிதே எண்ணி, மனத்தகத்திருத்தினுல், அன்று நல்லன மலரும் என்பதை ஆன்ரோர் ஆய்ந்துரைத்தனர். என்போல் பலர்க்குக் காலைத் தூக்கமும், இரவு விழிப்பும் அதிகம். சிற்றறிவு படைத்த புள்ளினங்களும் விடியற்காலையில் எழுந்து தத்தம் கடமைகளைச் செவ்வனே ஆற்றுகின்றன. " எம்பாவைச் " செய்யுள்களை அருளி அனைவரையும் அருள் வண்ணத்தில் தோய வைக்கவேண்டும் என்ற பெற்றிமைகோண்டுதான், திருவாதவூரடிகளாரும் கோதை நாச்சியாரும் அவ்வழியறிந்து அருள்வழி நடந்தனர். அவ்வழிப் பின்பற்றல் நலமதேயாயினும், அதைக் கடைப்பிடிப்பாரில்லை.

தொழில்வரித் தொல்லைகளையும், வருமானவரி வம்புகளையும் வீட்டுவரி விவாதங்களையும், நிலவரி நியாயங்களையும், ஆவணக் களரி அவதிகளையும் ஒருவாறு முடித்துக்கோண்டு. அமைதி பெறுவோம் என்று அழகன் அகத்தை நாடினேன். அகத்தை நாடினேனுக்கு, அலுப்பு மீதூர்ந்தது. நியாய மன்றத்தின் நியதிகளை நிம்மதியாக நினைத்துக்கோண்டிருந்தேன். அதற்குள் அங்காடிக்கு வந்திருந்த ஒருவர், அறுவை வாணிகத்தைப் பற்றிய புள்ளி விவரங்களைப் பேச என்பால் வந்தார். பேச ஆரம்பித்தோம். கடிகாரத்தின் முட்கள் இரண்டும், கணப் போழுதில் ஒரு கோடை வள்ளலைப் போலத் தன் கைகளை வேகு வேகமாகச் சுழற்ற ஆரம்பித்தன. இரவு மணி 10 என்று காட்டின. மணியோலி பிறந்தது. ஒலிகேட்ட அன்பர் விடைபெற்றுர்.

அலுப்புப் போகத் தூங்குவோம், என்று திட்டமிட்டேன். " எண்ணியவாருமோ ! மடநேஞ்சே " என்று ஒன்று என் சேவியில் சோல்லிக்கோண்டிருந்தது. என் செய்வது? அயர்ந்தேன் !

கீழ் வானத்தில் விடிவெள்ளி தோன்றியும், கண்ணிமைக்காமல் இருந்தது. ஆனைச்சாத்தன் பேச ஆரம்பித்தது. சேவற்கோழி கூவிற்று. காகமும் கரைந்தது. நாயும் குலைத்தது. இவை யெல்லாம் என் திட்டமிடப்பட்ட தூக்கத்தைக் கலைக்கவில்லை. ஆலைச் சங்கு அழ ஆரம்பித்தது. அதன் ஒலி வழக்கத்திற்கு மாருக இருந்தது. அலமந்து எழுந்தேன். என்ன? அவலஒலியாக உள்ளதே என்றெண்ணினேன். தூக்கம் கலைந்தது. ஆலைத் தொழிலாளர்களின் அதிபர் வீட்டில் அவர் தம் மனைவிக்கு அரவம் தீண்டிய அயர்ச்சியின் விளைவால், அங்கு வேலைபார்க்கும் அனைவரும் வரவில்லை. அவர்களுக்கும் விடுமுறை. அஃதே போல் தொழிலாளருக்கும். திருவிழாப் பார்க்க வந்து தெரு வழியே தெளிவற்ற மக்களிடும் கூக்குரல்போல, சத்தமிட்டுச் சென்றனர் தொழிலாளர்கள்.

காலையில் எழுந்தவுடன் அவலச் செய்தி! அயர்ந்து அமர்ந்தேன் முகப்பில் உள்ள திண்ணையில். இலக்கிய இன்பப் புலவர் என்பால் வந்தார். ''இன்று அத்தி பூத்தாற் போல வந்திருக்கிறீர்களே!'' என்றேன். வியந்து நயந்தார். ஏன்? ''மல்லிகை மலர்ந்தாற்போல் என்று இயம்பக் கூடாதா?'' என்ருர். 'வாயில் வந்ததை வகையாகச் சொல்லினேன்'' என்றேன்.

''தங்கள் வருகை தொடர்ந்து நடைபெற்றிருப்பின், யானும் எப்பொழுதோ ஓர் இலக்கிய நயப்புலவன் ஆகியிருப்பேன். யாருக்கும் தெரியாமல் அத்தியும் பூக்காமலே காயைத்தோற்று வதுபோலத் தாங்களும் வெகு நாட்கள் கடந்து, அயர்ந்து அமர்ந்துள்ள என்னிடம் வந்திருக்கும் பொழுது வேறு எந்த உதாரணம் சொல்வது'' என்றேன். அவர் தம் முகத்தில் நகை பிறந்தது, என் முகத்திலோ? சோர்வு பிறந்து, அலுப்புத் தட்டியிருந்தது. இலக்கிய இன்பப் புலவரைக் கண்டால் எனக்கு எப்பொழுதுமே எல்லையற்ற இன்பம். அவர் கூறுவதைப் பெரும்பாலும் தடையின்றி ஏற்பது வழக்கம். ''வாருங்கள் செல்வோம்'' என்றழைத்தார். இருவரும் புறப்பட்டோம். அலுத்த கால்களுக்குக் கடுகடுத்த நடையிருக்குமா? மெல்ல நடந்தேன். ''வழக்கத்திற்கு மாருக நடைபயில்கின்றீர்களே! ஏன்?'' என்ருர். கடந்த நாட்களில் முடித்திருந்த கடுமையான வேலைகளைப்பற்றி அவரிடம் கூறியபொழுது, உள்ளதையறிந்து உளமகிழ்வெய்தினர்.

வழியில், ஒரு தண்மை மிக்க தடாகம். அழகைக் காக்கும் அல்லி மலர்களும், கண்ணைக் கவரும் கருங்குவளை மலர்களும், தந்தத்தை நிகர்த்த தாமரை மலர்களும் பூத்துக் குலுங்கிப் பார்ப்பாரைப் பரவசத்தில் ஆழ்த்தின. யானும் இலக்கிய இன்பப் புலவரும் அவற்றின் வண்ணத்தில் ஆழ்ந் தோம். ''ஆளில்லா மங்கைக்கு அழகில்லை'' என்பர் முதறிஞர். ''ஆளுள்ள மங்கையின் வதனம் வளமுற்றுச் செழிக்கும். அஃதேபோல் இத்தடாகத்தின் அழகு கணவனுடன் கூடி இன்பம் துய்த்து வாழும் மனைவியின் இன்முகப் பொலிவு போல அமைந்துள்ளது என்றார்'' புலவர். காலைக் கடனாற் றினோம். வீடு செல்ல விரும்பாதவர்களாய், இருவருக்கும் சற்று அலுப்பு நீங்கக் கடுகி நடந்தோம். புலவர் பெருமகன் உடனிருக்கும்பொழுது பசி எங்கிருந்து தோன்றும்?

வழியில், ஒரு கானாறு. நண்பகல் நேரம். வெயிலின் வெம்மை நடுத்தரமாகத்தான் இருந்தது. சிறிதுகூடத் தண்ணீ ரில்லை ஆற்றில். தண்ணீரிருந்தால், மருதநில இன்பத்தை மட்டிலாது பெற்றிருப்போம். நீரற்றிருப்பதால், ஆறு கைம் பெண்ணைப்போல உள்ளதென்றேன். நீங்கள் சொல்வது சரி யில்லை என்றார். ''இவ்வாற்றின் வழியாகத்தானே, குறிஞ்சி நிலத்தில் தோன்றிய வெள்ளம் ஓடித் தாமரைத் தடாகத்தை நிரப்பியது. இது காலை நீர் இல்லை: அது எதுபோல உளதெனின், தலைவன் தன் தலைவியை விட்டு நீங்கிக் கடல் வாணிகம் செய்தற் பொருட்டுப் பிரிந்து செல்லுங்கால், பிரிவுத்துன்பம் நீக்க இயலாதவளாய்க், கண்ணுக்கு மையிடாமல் கருங்குழலைக் கட்டி முடித்துக் கந்தலாடையணிந்து, அவனையே எண்ணியவளாய் ஏக்கத்திலிருப்பதுபோல, இக் கானாறும் தன் கணவன் போலுள்ள நீரைத் தடாகத்திற்கு அனுப்பி விட்டுத் தன் கணவனான வானம் எப்பொழுதுவரும் என்று ஏங்கியுள்ளது. அதனால் கணவனை இழந்தவள் போலல்லாமல், கணவனைச் செல்வம் சேர்த்துவர அனுப்பிய தலைமகள் போல உள்ளது இவ்வாறும்'' என்றார் புலவர். கேட்டேன். களிமகிழ் வெய்தினேன். இதுபோன்று பற்பல பேசினார், பிரிவுத் துன்பத்தால் தலைவி படும்பாட்டை விட ஆற்றைக் கடந்து அக்கரை சேர்வதில் நாங்கள் பட்டபாடு அளவு கடந்தது. சிறிது தூரம் சென்றோம்.

வழியில், ஒரு உணவு விடுதி. அதன் உரிமையாளர் ஒரு உன்னத மனிதர். அவரிடம் நாலணாவிற்கு நல்ல சாப்பாடு' எட்டணாவிற்கு எட்டாத சாப்பாடு. "நாலணாவிற்கு உண்பவர்கள் (நன்றாக) வயிறார உண்பவர்கள். எட்டணாவிற்கு உண்பவர்கள் உயர்ந்தரக மனிதர்கள். என்னிடத்தில் உணவு உண்பவர்கள் உன்னத வகை மக்கள். நீங்கள் இருவரும் நாலணாவிற்கே சாப்பிடுங்கள்" என்றார். வயிறார உண்ண முடியவில்லை. ஒருவாறு உண்டியை முடித்தோம். சிறிது இளைப்பாறினோம். புறப்பட்டோம்.

மாலைப் பொழுது மெல்ல வந்தது. மாதாகோவிலின் மணியோலி கேட்டது. அருகில் சென்றோம் இருவரும். ஆறு மெழுகு வத்திகள் ஏற்றப்பட்டு, அனாதைச் சிறுவர்கள் மண்டியிட்டிருக்க, பக்திப் பரவசத்தில் ஆழ்ந்த பாதிரியார், அவர் பிதாவின் பெயரில் பண்ணிசைக்க, அனைவரும் அதைத் திரும்பப்பாட, அதைக் கேட்க மகிழ்ச்சியாக இருந்தது. மௌனமாகச் சிறிது நேரம் நின்று திரும்பினோம். மண்டியிட்டுப் பரம பிதாவைப் பாடிய அனாதைகளின் ஒலியில் இன்பம் இல்லை. அவலம் தோய்ந்தது. மீண்டும் வழி நடந்தோம்.

உன்னத மிக்க உல்லாசபுரியை அண்மினோம். அன்று பௌர்ணமி நிலவொளி நிலத்தில்பட்டு, மண்ணையெல்லாம் பால் வண்ணமாக்கியது. புலவர் பெருமகனுடன் சேர்ந்தால் பொழுது போவது தெரியுமா? சத்திரத்தில் தங்கினோம். மேற்பார்வையற்ற சத்திரம். சத்திரத்தில் யார் வேண்டுமென்றாலும் தங்கலாம்; ஆனால் சாப்பாடு கிடையாது. அச் சத்திரத்தினின்றும் கூப்பிடு தூரத்தில் நவநாகரிக முறையில் சமைக்கப் பெற்றதோர் மயன் மாளிகை. அம்மாளிகையின் மேல் வீட்டிலிருந்து, ஒரு நவநாகரிகப் பெண்ணின் நிர்மதியற்ற, அழுகை தோய்ந்தாற் போன்ற சொற்கள் கேட்டன. வெண்மதி எங்களுக்கு மனமகிழ்வைத் தோற்றுவித்தது. அந்தப் பெண்ணிற்கோ? மனவேதனையை அளித்தது. விரகவேதனை கொண்ட அம்மெல்லியலாள் தானாகப் பேச ஆரம்பித்தாள்.

"ஏ! வெண்மதியே! என்பால் வந்து ஏன் காய்கின்றாய்? நீ ஆலத்தைக் காய்ந்தாய். என்னை விட்டுச் சென்று, பரவசத்துடன் பலநாட்களாகப் பரத்தையுடன் பல்லவி பாடிப்

பண்பற்று வாழும் என் தலைவனிடம் சென்று (அத்திக்காய்க்) காய்ந்து இன்பத்தைப் பெருக்கு! என் தலைவனைப் போன்று வாழ்கின்றவர்களுக்கும் சகிப்புத் தன்மை காட்டி ஆளுகின்ற அரசனின்பால்சென்று காய்வாயாக! என்னையும் என் தலைவனை யும் பிரித்துவைக்கத் தூதுசென்ற, மாதான பாங்கியிருக்கின் ருளே, அவள்பால் சென்று காய்வாயாக! என்று மனமுடைந்து தன்னை மறந்து பேசினுள்" அந்த அருமைப்பெண்.

என்ன? இலக்கியப் புலவரேறே! "எங்குக் கண்டாலும் இன்று சோகரசமாகவே அமைந்திருக்கிறது" என்றேன் "துன்பத்தின் பிறப்பிடமல்லவா? இன்பத்தின் ஊற்று" என்ருர்; அம்மட்டோ! மேலை நாட்டுப் புலவர்களும் மேன்மை யுறப் புகல்வதைக் காண்மினே!

துன்பத்தின் விலை கொண்டுதான் இன்பத்தை வாங்க **வேண்டும்.**

All pleasure must be bought
at the price of pain. — Foster

இன்பமாகிய இலாடத்தின் மேல்தான் துன்பம் இன்றும் நடந்து செல்கின்றது.

Grief still treads upon the
heels of pleasure — Congreve

துன்பங்கள் நிறைந்த ஒரு மனிதன் ஓர் இன்ப மனிதன்.

A man of Pleasure is a man
of pains — Young

ஏட்டை எடுத்தார் இன் தமிழ்ப் புலவர். எழுத்தாணி தந்தேன். தீட்டினுர் தீதற ஒரு கவிதை. கவிதையைக் கேட்கக் களிநடம் புரிந்தேன். கவி வருமாறு:—

'அத்திக்கே காய்காய்காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக்கேன் காய்கின்ருய் எட்டிக்காய் — பத்தற்
றவரைக்காய் பாவைக்காய் கோவைக்காய் சுற்றத்
தவரைக்காய் தூதுவரைக் காய்.'

இது நிலவை(த் தலைவி) வெறுத்தல் என்னுந் துறையி லமைந்த தனிப்பாடல். இதிற் பலகாய் வந்துள்ளமையும் பொருள் வேறுபாடுறுதலும் காண்க. அ+திக்கே - அத்திக் கிலே. ஆலம் - நஞ்சு. நஞ்சினையும் காயும் அளவு வெய்ய நிலவு. எட்டி - தொலைவில். பத்து - பற்று, காதல்-பத்தற்றவர், எனக்கும் தலைவற்கும் இருந்த பற்றை அறச் செய்தவர்; என்கண் பற்றில்லாதவர். பாவை - தலைவனுடன் சென்ற பிறள். கோ - தலைவன். சுற்றத்தவர் - தலைவி - தலைவன் சுற்றத்தவர்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam

Velur Sri Vaithianathaswami Devasthanam

Vaithiswarankoil.

இன்று சாயந்திரம் இந்தநேரத்திற்கு வந்து சிவபிரானுடைய தரிசனம் கிடைக்கும் பாக்கியம் பெற்றது. கோயில் மூர்த்திகளின் அலங்காரங்களும் ஆராதனைகளும் மிகவும் நேர்த்தியாகவும் பாராட் டத்தக்கதாகவும் உள்ளது. இவ்வளவு சிறப்புடனும் செம்மையாக வும் கோயில் பணிகள் நடப்பது கட்டளை சுவாமிகளின் அரிய முயற்சியாலும் அவர்களுடைய இடையருதபக்திப்பணியின் ஊக்கத் தினுலும் கோயில்சிப்பந்திகளின் ஒத்துழைப்பாலுமேஎன்பது மிகவும் பாராட்டத்தக்கது. இன்னும் மக்களிடையே பக்தி பரவவும், பாமர மக்களிடம் மனமாற்றம் ஏற்பட்டு இந்து மதத்திலும், அதன் உன்னத கொள்கைகளிலும் ஆர்வம் ஏற்படவும் சிறந்த மதப்பிரசாரகர்களைக் கொண்டு பாமரமக்களுக்கு ஏற்ப சிறந்த முறையில் பிரசாரங்கள் ஒவ்வொரு விசேஷ தினத்தன்றும் நடத்தி மக்களிடையே தற்சமயம் புதிய மனமாற்றத்தை ஏற்படும்படி செய்வது சிறந்த பணியாகும் என்று எண்ணுகிறேன்.

(Sd.) R. Muthukannu,
S. D. C. Rev. Court,
Kumbakonam. 29—10—58.

# ALLURING AMARNATH

*By Naradar Srinivasa Rao,*

These are days of multi-purpose projects, multi-storeyed structures, multi-coloured films, multi-vitamins, multy-ever so many things. A trip to Amarnath, 12,500 ft. above sea level, in Kashmir, the seat of Suddha Linga—the abode of Lord Siva, is a multi-purpose trip, for this long hazardous trip tests the strength of mind the capacity of the body, and one's devotion to reach HIM.

Amarnath is one of the most enchanting and the most holy place in North India. Two thousand and fifty miles from Madras, the Grand Trunk Express train takes you, or should take you, to Delhi in 46 hours or so. A day's halt, and eleven hours' journey by train, you will be at Pathankot, the railway terminus. Then begins 260 miles by bus or station wagon over the Himalayan terrain, up and down the the famous Banihal Pass, before you arrive at Srinagar, Capital of Jammu and Kashmir. By air it is quicker; you have to board the night plane at 11 p. m. to be at Srinagar at noon the next day.

Pahalgam is a lonely mountain resort, 60 miles from Srinagar, where the luxury of a car ride stops and a six-day trek. over 28 miles begins. Some do it by leg, packponies generally mules to carry warm clothing, provisions etc. Each pony is paid just Rs. 12 to Rs. 14. for the whole trip and each pony is led by its owner. Warm clothing bedding etc., could also be had on hire.

The Full Moon day in August is the auspicious day to have a glimpse of the Lord of the Amarnath cave,

where on Full Moon Day ice forms itself into a Siva Linga full five feet high. One is almost appalled when the ash-smeared Nirvana Sanyasi, inside the cave, says he lives there throughout the year, doing puja to the Lord.

Nature here is in its naked beauty, breath-taking, awe inspiring and unspoilt by the hand of man. The path to the Cave of Lord passes over narrow and steep mountains which at many places are treacherous, after even a slight drizzle. The Himalayan weather is unpredictable, and September is not the time when pilgrims take the risk of the hazardous trip.

We were persuaded against proceeding, by those who had to retreat after reaching Seshnag, because of sudden snowfall. But the Lord was kind to us and answered to the prayers of His Holiness the Swamiji of Dharmapuram who headed our party. Sunshine greated us when we reached Seshnag. Nevertheless, a mere Himalayan thunder gave us an illusion of an avalanche, and when day broke, we saw the whole area covered with mist and cloud. We had to stay there for a day before we resumed the trek, and the whole night we chanted the name of the Lord.

From Pahalgam (7,000 ft.) up to Chandanwari (9,000 ft.) the path is good A Jeepable road is being laid now. There are two Traveller's huts at Chandanwari. The real test came after we left Chandanwari. For a mile we followed a stream of gushing blue water, knocking about big boulders, dancing over smaller ones. The sweet music of the whistling thrush can be heard now and then, among the green trees of the dense vegetation all around.

Suddenly there is a steep ascent, 2,500 ft. taking you to the top of the Pissu Ghatt—the very place where

last year, an American, five Kashmiris and four ponies were buried alive. Another 30 miles trek you go high above the tree belt. On Pissu Ghatt you see the famous Birch trees, whose bark resembles newsprint in rolls. Legend has it that Kalidasa wrote his Sakuntalam on this bark.

As one plods on, the beautiful scenery becomes spectacular—huge glaciers from the gleaming snow-capped mountains from which clear water starts on its merry, dancing course down the never-ending steep slope. From here onwards the whole area is an enchanting mosaic of flowers and green grass

The going is easy from Pissu Ghatt to Seshnag. After a sharp ascent you reach the shores of the lovely lake at the Seshnag (11500 ft) whose water is milky-green. Straight out of this water, a mass of rocky mount struts up ending in a snowy peak. The scenery all-around, as you get attuned to the music of the mountains is indeed a sight for the Gods. From Seshnag, it is 12 to 13 hours trek to Amarnath. We started late on ponies, and so, on the way back were caught up in pitch darkness. You cross 12 mountains from Seshanag before you are at the feet of the Lord. The first is 15.500 ft. high and the ponies fret and fume as they climb up. the rider getting a thrill of his life-time. when he realises he has almost covered half as much as did Tensing Norkay.

En route is the huge boulder, Nagarpal, and pilgrims according to tradition beat the rock with pebbles, symbolic of announcing their arrival. The next place of importance is the plain of Panchatarni. From here you can have a panoramic view of the 18,000 feet high peaks of the Amarnath Range. This

big plain a mile long. and two furlongs wide according to the Puranas, is the spot where Lord Shiva performed his Tandava Nritya (Cosmic Dance)

At Panchatarni, the guide asks you to reduce your baggage to the barest minimum, for the pathway is just three feet wide, zigzagging and ascending dangerously and rapidly. The pilgrim has an inescapable feeling that he is directly plodding his way up to the Skies. One wrong step, and you are lost for ever. Here all thoughts of the 'mundane' melt away like the snow on the mountains. The name of your family Deity dwells on your lips and one is tempted to promise many things if only the Lord would take him or her safely to and back from Amarnath The eyes refuse to stray away from the crooked path, and when the pony falters, one mumbles in earnest prayers—Slowly, Slowly! At last you are nearing the Abode of the Lord, not before you trek one mile or more of frozen snow. River Amaravathi has frozen on the top, as the clear water steals a way out of the snow far below the huge mass of snow.

As we stood at the foot of the huge cave and took a good look around, Oh, what an ecstatic divine scenery! We felt the presence of the Divine Maker in every inch of the mountains, which are at once inspiring, uplifting and challenging beckoning us to higher things. "The pilgrimage to Amarnath symbolises the long-pilgrimage of the soul towards the ultimate sublime goal" said the Sad- Ri-yasat of Kashmir. How very true. The Pilgrims take a bath in the icy-cold water of the water-fall near the cave and shivering from head to toot, walk up several hair-pin bends about 200 feet.

And there the pilgrims are rewarded by the darshan of the Suddha Linga (ice Shiva) in a niche. You bow before the Lord, happy tears trickling down your cheek. A thousand years back the great Sankaracharya had darshan of tbis Linga, and 60 years back Swami Vivekananda was there at the feet of the Lord.

In a corner sits a naked fakir. His disciple gives you a welcome cup of steaming tea. Around the caves you see millions of small yellow and violent cup-like flowers seeming like waiting to receive the nectar from the sacred hands of Siva Himself.

A foreigner who was there on the day we reached exclaimed in great excitement "Who says there is no God? I see him everywhere here." None of us could disagree. My palms automatically came together as I raised my arms to worship the Lord and thank Him for everything.

—The Mail Dated 24—11—58.

ஞானசம்பந்தம் ஆண்டுக் கட்டணம் ரூ. 1 — 50

[ சந்தாதாரர்களுக்கு ]

புதிய சந்தாதாரர்களாகச் சேர்பவர்கள் புதிய சந்தா என்பதோடு தங்களின் முகவரியையும் தெளிவாக மணி யார்டர் கூப்பனில் எழுதவேண்டும். பழைய சந்தாதாரர் புதிய ஆண்டுக்குப் பணம் அனுப்பும்போது பழைய சந்தா என்று குறித்தல் வேண்டும்.

ஏதேனும் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் பதில் எழுதுவதற்குப் போதுமான தபால் பில்லை அனுப்புதல் வேண்டும்.

முகவரி :— செயலாளர், "ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

தருமையாதீனத்தின் அடியவருள் ஒருவராகிய



ஸ்ரீமத் மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அண்மையில் சிவனடி சேர்ந்தார்கள்.

# ஸ்ரீமத். மௌந.
# சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

**வித்துவான், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்**

பிரின்ஸிபால், தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமைக்
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணம்மிக்கார்"

(பெரியபுராணம்)

'முனிவர் பெருந்திரள்' 'அடியார் திருக்கூட்டம்' என்னும் செந்தமிழ்த் தொடர்களையும் சிற்சில காலத்தில்தான் எழுத்துருவில் நினைவு கூர்கிறோம். கண்கூடாகக் காண்கின்ற சிவ புண்ணியத்தை இக்காலவுலகம் செய்துகொள்ளவில்லை. இருந்தால், பல்வேறு சமயங்களைச் சார்ந்த அவ்வம்மடங்களில் அடியார் திருக்கூட்டத்தைக் கண்டுகண்டு உள்ளம் குளிரும் நிலையிற் கண் குளிரப் பெறுதல் கூடும் அன்றோ? அடியவராவதற்குச் சிறிதும் விழையாதகாலம் இது. உண்டுறங்கியுலவிக் கலவிப் போத்தேனச் சேத்தொழியும் போய்யுலகப் போல்லா வாழ்விலே செல்லாநிற்கும் போறியிலிகட்கு மேய்யின்பப் பெருவாழ்விற்கு உள்ளம் பள்ளம் ஆகாதன்றோ?

'தன்னாட்டம்' 'அருள்நாட்டம்' என்று நாட்டம் இரண்டு. இப்போதைய நாட்டம் உலகிற் பெரிதும் தன்னாட்டமே. அருள் நாட்டம் ஓரளவு இருப்பினும், பேரின்ப நாட்டமாயில்லை, சிற்றின்பங்கருதிய நாட்டமாக நிகழ்கின்றது. எல்லாம் அப்படி என்பது போருந்துமோ? சேரியிலும் வில்வமரம் உண்டு. போய்யுலகிலும் மேய்யுணர்வுடையார் இருப்பர், இருக்கின்றனர், இருந்தனர். இருந்தவருள் ஒருவர், நம்மிடையே இலங்கிநின்று மறைந்து சிவனடி நிழலில் அழியாத இன்பம் ஒழியாது பேற்றுக் கோண்டிருக்கும் தருமைச் சோமசுந்தர முனிவர்.

அவர் இன்னிலையில் நன்னிலையில் விளங்கியவர். துறவு நிலையை 33 ஆண்டிற்கு முன்பு தருமையாதீனத்து 23 ஆவது குருமகாசந்நிதானத்தில் அருளப்பேற்றவர். எளிதிற் பேறலரிய

காலம் அது. ஆதீனக் கோயில்களில் கட்டளை விசாரணை சிறப்புடன் நிகழ்த்திப் பேரும் புகழும் சீரும் சிறப்பும் உற்றவர். சைவ சித்தாந்த சாத்திரங்களை நன்கு கற்றவர். உலகம் தம்மையும் தாம் உலகையும் அறியப் பிரசித்தமாக விளங்கிய வித்தகர். தருமையின் பெருமையை வளர்த்துவரப் பலவழியிலும் உழைத்தவர். மெய்கண்டான் மாநாடு நிகழ்த்திச் சைவத்துக்குப் புத்துயிரும் சைவர்க்குப் புதிய ஆக்கமும் சைவ சாத்திரங்களுக்கு மறுமலர்ச்சியும் விளைத்த தருமையாதீனத்தின் 24 ஆவது குருமகாசந்நிதானத்தில் முதன்மையாராய் நின்று முயன்ற அயரா அன்பர். ஆதீன சமயப்பிரசாரக் குழுவின் தலைவராய் நாடெலாம் நாளெலாம் சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பெரிதும் முயன்று, உழப்பின் வாரா உறுதிகள் இல்லை என நிறுவியவர். இக்காலத்தில் உயர்திரு. A. உத்தண்டராமப் பிள்ளை, B. A., B. L., I. A. S. அவர்கள் அறநிலயங்கள் சிறந்து விளங்கக் காரணராயிருப்பதுபோல அக்காலத்தில், உயர்திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார். B.A. B L அவர்கள் விளங்கினார்கள். அவர்கள், தம் முயற்சிக்கு நம் முனிவர் பிரானைத் தனித் துணையாக்கொண்டது ஈண்டுக் குறிக்கத்தக்க தொன்றாகும். தேசம் எங்கும் தருமையின் புகழே பேசப்பெறும் பெருமைக்கு, அக்காலத்து மக்கள் மனநிலையும் ஒரு காரணம். நாத்திகம் இவ்வளவு மிகுந்தில்லை. நாத்திகம் மிக்க இக்காலத்திலும் ஆத்திகத்தின் அழியாப்ரகாசம் குறையாது வீசிக் கொண்டேதான் இருக்கிறது. எங்கும் லக்ஷார்ச்சனை, எங்கும் கோடியார்ச்சனை, எங்கும் தங்கக் கவசம், இப்படி எவர் செய்தனர்? எங்கே செய்தனர்? எப்போது செய்தனர்? 'மெய்ச் சுடருக்கெல்லாம் ஒளிவந்த பூங்கழல்' நாத்திகத்தை மறைத்துப் பிரகாசிக்கவல்லது என்னும் உறுதி நம் முனிவர்க்கு இயல்பாகவே உண்டு.

'ஆரம் கண்டிகை ஆடையும்' காவியே
'பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ'?

இப் பெரியபுராணப் பாடல், இப் பெரியார்க்கும் முழுப் பொருத்தமானது. இங்கே 'வீரம்' என்பது மாயைப் போர்வீரம் அன்று. ஆணவப் போர்க்குரிய ஞானவீரம். அன்பின் வலிமையைக் குறித்த அருள்வீரம்.

" தூரத்தே திருக்கூட்டம் பலமுறையால் தொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றழியா
வீரத்தார் எல்லார்க்கும் தனித்தனிவேறு அடியேன் என்று
ஆர்வத்தால் திருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்செய்தார் "

என்ற அருள்மொழியில் விளம்பிய அழியாவீரம். (நாள்தோறும்) தம் உடலினின்று நீங்கிச் சிவனடி நீழலில் என்றும் இன்பம் பெருகும் இயல்பில் இருக்கும் ஞானப்பியாசத்தின் வல்லமையால் புளியம்பழம் ஒத்திருந்து, மெய்ப்பற்றன்றி மெய்ப்பற்றில்லாத வீரம். தம் திருமேனியைச் சமாதிக்குழியில் வைக்குங்காலம் எக்காலமாயினும், 'உள்ளபோதே உய்யப்பார்' என்னும் சிவஞான சித்திநெறி யுபதேசத்தின்படி, அக் குழியில் இடுங்கால் இடும் பைக்கு இடும்பை இல்லாதவாறு திருவருளாலும் குருவருளாலும் அவ்வப்போது கிடைக்கப்பெறும் திருநீற்றுச் செல்வத்தைச் சேர்த்துவைக்கும் (சூரசங்கார) வீரம். இவ்வீரம் இத் தருமைப் பெருமுனிவர்க்கு இயல்பாகவே உண்டு.

" சீலம் இலரே எனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம் இகழ்ந்து அருநரகம் நண்ணுமல் எண்ணுவார் "

'ஈறில் சிவ நன்னெறியே பொருள் ஆவது என உணர்வு நாட்டு வார்' ஆனசாக்கிய நாயனூர் போல, நம் பாக்கிய நாயனுராகிய இவரும்,

" எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை "

யுடையவராய் விளங்கினுர். இம் முனிவரேறு தம் திருமேனியைச் சமாதிக்குழிக்கிட்டுப் பிறவிக்குழியினேறும்போதே சிவனடி நிழலைப் பொதுவறக் கொண்டவராய்ப் பேரின்ப நுகர்வாரானுர். என்று? 25-11-58அன்று. எப்பொழுது? வைகறைப்பொழுது. எவ்வாறு? 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்று எல்லாரும் சொல்லவல்லாராகும் ஆறு.

4—12—58 குருவாரத்திலே அத்திருமேனியை அடக்கம் செய்த தூய புண்ணிய தலத்திலே சைவ சம்பிரதாயப்படி வழி பாடும், அவர் சைவசித்தாந்த ஞானபாநுவாதலின், 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது திருவுள்ளப் பாங்கின் வண்ணம் சைவ சித்தாந்த மாநாடும் (3. 4—12—58) தேதி களில் மிக்க சிறப்புற நிகழ்ந்தன.

தருமையாதீனப் பெருமுனிவர்

# 'ஆரூர் அமர்ந்த அரசே போற்றி'

(முத்து. சு. மா.)

உலகில், தேவாலயங்கள், மடாலயங்கள் முதலியவை தோன்றி இருத்தல் ஏன்? வாழ்க்கைக்கு இடமான வீடுகளும் அவையும் ஒரு காரணத்துக்காகவே தோன்றியிருப்பின், வீடுகளே போதும். அந்த ஆலயங்கள் வேண்டாவே! வேறு காரணம் இருத்தல் வேண்டும். அது சைவ சமயத்தைக் குறித்த அளவில்,

"திவ்வியம் பழுத்த சைவசித் தாந்தத்து
இறவா நிலைமைபெற்று இன்பம் ஆர்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பேறப்புரி வதுவே" ஆகும்.

அது, 'நிலமிசை நீடுவாழ்வார்' ஆக விரும்பிக் கடவுளின் மலர் அடிசேர்வார்க்கே உரியது. அதைப் புரியவல்ல குருமூர்த்திகள், (இக்காலத்தில் அளவிலர் ஆயினும்) முற்காலத்தில் ஆங்கு ஒன்றும் ஈங்கு ஒன்றும் ஆக விளங்கியிருந்த மடாலயங்களில் வீற்றிருந்தார்கள். அவர்களுள்,

"தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும்
திருநகர் ஆக அரசுவீற் றிருக்கும்
மாசிலா மணியென வண்பெயர் நிறீஇ
மேன்மையோ டமர்ந்த ஞானசம் பந்தனென்
றருந்தவர் துதிப்பஓர் பெரும்பெயர் நிறீஇப்
பரமா னந்தப் பரவையுள் தோன்றிய
இன்பவா ரமுதம் அன்பருக் கெளிதில்
அளித்துயிர் களின்வினை ஒளித்தோ டச்செயும்"

குருஞானசம்பந்தனுர் தலைசிறந்த மூர்த்தி, அம் மூர்த்தியின் கீர்த்திக்குப் பூர்த்தியான ஏது,

"வண்டமிழ்க் கமலைப்
"பெரும்பதி புரக்கும் பேரருட் குரிசில்
நான்மறை நவின்ற நற்பொருள் இவையென
மோனவா சகத்தால் முப்பொருள் நவிற்றுபு

நன்னலம் புரியும் ஞானப் பிரகாசன்
இன்னருள் பழுத்த செந்நெறிச் செல்வ ''மே.

அச் செல்வத்தை நிறைய ஏற்று, ஞானபூமியில் விதைத்து வரக் கட்டளையிடப்பெற்று, வெளியேகிக் கோங்குநாடு, மலைநாடு, பாண்டிநாடு, தொண்டைநாடு முதலிய பலவும் சார்ந்து, சைவப் பயிரும் தமிழுயிரும் சம்ஸ்க்ருத சாஸ்திரமும் தழைக்க உழைத்த சம்பந்தசரணாலயர், வெள்ளியம்பலவாணர் முதலிய தருமையாதீனத் தம்பிரான் சுவாமிகள்போல இக்காலத்தில் கிடைப்பவர் இலர். அவர் இனத்துள் சேர்க்கத்தக்க சிறப்பும் விறப்பும் சைவப்பிறப்பும் திருவருள் உறைப்பும் வாய்ந்து தொண்டாற்றி நிலவிய மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருக்கார்த்திகைத் தீபதரிசனத் திருநாளில் சிவஜோதியிற் கலந்து பேரின்பச் செல்வரானார்கள்.

அம் முனிவர் நல்லவுள்ளமே தருமை ஆதீனப் புலவர் குழாத்துள் 'என்னை (முத்து. சு. வை)யும் ஒருவன் ஆக்கி' 24 ஆவது குருமகாசந்நிதானம் சீலத்திரு. சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 'இருங்கழல்' என் சென்னிக்கு அணிசெய்யவைத்தது. 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது திருவடி நிழலில் வாழ்வைத்தந்தது. கல்லூரியில் தமிழ் கற்பிக்க நிறுத்தியது. அப்பெருமானுக்கு அடியேன் கைம்மாறு ஒன்றும் செய்ய வல்லேன் அல்லேன். 4—12—58 காலையில் நடந்த மாகேசுர பூஜையில், திருமுறைப் பாராயணம் புரிந்து வழிபட்ட அடியவர்களும் புலவர்களும் கூடிய திருக்கூட்டத்தில் சார்ந்திருக்கும் புண்ணியம் கிடைக்கப் பெற்றேன். அது பெறலருந் தனிப்பேருயிற்று.

'' எற்கமலம் செய்யும் எழில்மாசி லாமணிதாட்
பொற்கமலம் சென்னி பொலிவித்தேன் — நற்கமலை
யூரிற் குறுகினேன் ஒர்மாத் திரையளவேன்
பேரிற் குறுகினேன் பின். ''

என்றவாறு,

திருவாரூரை அணுகினாலும் ஜீவன் சிவன் ஆகும் எனின் அங்குத் திருமேனியை நீங்கிய நம் பெருமாமுனிவர்க்குத் தியாக

ராஜன் பாதாம்புஜம் பேறும் பாக்கியத்துக்கு யாது குறை? அத் திருக்கூட்டம் மாகேசுரபூஜை புரிய ஏகியபோது, திருமுறையை ஓதிக்கோண்டே சென்றது. அடக்கம் செய்த அருளிடத்தை அடைந்த வேளையில் 'பரமானந்தப் பழங்கடல் அதுவே' என்று சுட்டிக்காட்டி வணங்கியது. அது திருவருட் சம்மதம் என்று தேரிந்தது. எல்லாரும் அரகர முழக்கம் இட்டனர். பாசப்பற்று விட்டனர். பரமனடியைத் தோட்டனர். உலகவாசனையும் கேட்டனர். இதை, புலவர்மணி திரு. ரத்நதேசிகர் அவர்களும் எழுதியிருக்கின்றார்கள்.

இத் தருமைமுனிவர் சைவ சித்தாந்த ஞானானுபவத்தில் மிகச் சிறந்தவர். அதனைத் திருவுளத்திற்கோண்டு, நம் குருமணி, சைவ சித்தாந்த மாநாடு இரண்டு (3, 4—12—58) நாளும் நடத்தவேண்டுமேன்று பணித்தருளியது. மாநாடும் மாகேசுர பூஜையும், திருவாரூர்க் கோயில்களில் வழிபாடும், சகஸ்ர நாமார்ச்சனைகளும் மிக்க சிறப்புடன் நிகழ்ந்தன. அன்பர் பலர் கலந்துகோண்டு இன்பம் உற்றனர். உறுத்தினர். "இமைப் போழுதும் என்நேஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க."

"மருவியேப் போருளும் வளர்ப்போன் காண்க
யாவரும் பேறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
சிவன்என யானும் தேறினன் காண்க
அருந்தவர்க்கு அருளும் ஆதி வாழ்க
அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கோள்வோன் வாழ்க."

---

## பண்ணெறி விளக்கம்

களமூர், பேருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

உரகத் திருப்பவன் நற்சார்ங்கபாணி யுவந்த வேழிற்
றுரகத் திருப்பவன் மாத்திரி மைந்தன் றுதைந்திரதி
விரகத் திருப்பவன் மீன்கோடி மாரன் விளம்புமேழு
நரகத் திருப்பவ னல்லோரை நிந்திக்கும் நாவினனே. 4

## சிவத்திரு. மௌந.
# சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள்
சென்னை.

சிவத்திரு. மௌன. சோமசுந்தரத் தம்பிரானடிகளை 1927 ஆம் ஆண்டு நம் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான ஐயாறுடைய அடிகளின் திருக்கோயிலில் கட்டளைத் தம்பிரானாக விளங்கும்போது கண்டேன். அப்போது யான் திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ் பயின்றுகொண்டிருந்தேன். அவர்கள் தவக்கோலம் என்னை ஆட்கொண்டது. ஐயாறப்பர் திருக் கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம் அவர்களைக் காண்பது உண்டு.

ஒரு நாள் கட்டளை மடத்தில் மறைத்திரு வாலையாநந்த அடிகளைக்கொண்டு கல்லூரி மாணவர் சிலர்க்குச் சமயதீட்சை செய்வித்து சருக்கரைப்பொங்கல் வடை முதலியன அளித் தார்கள். அப்போதே அடிகளுக்குச் சமயப்பணியிலுள்ள ஆர்வத்தைக் கண்டு களித்தேன்.

1942 ஆம் ஆண்டு தருமை யாதீனத்தில் 24ஆவது குரு மகாசந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அருட்செங்கோல் செலுத்திவந்த காலையில் மௌன சுவாமிகள் அடியேனைச் சமயப்பணிக்கு ஈர்த்து வந்து குருமகா சந்நிதானமவர்களுடைய திருவடிகட்கு ஆளாக்கி, அவர்கள் திருக்கரத்தால் சண்முக விலாசத்தில் செபமாலை அளித்தருளப் பெறும் பேறு றினை அளித்தார்கள். அவர்கள் செய்த நன்றியை என்றும் மறவேன்.

எங்கெங்கே சமய மாநாடுகள் நடைபெறுகின்றனவோ அங்கங்கே அடிகள் எழுந்தருளி அருளுரை கூறுவார்கள். பழநியில் திருமுறை மாநாடு நடத்தி அம்முறையினை எங்கும் பரவச்செய்தார்கள். தருமை யாதீனத்தில் நடைபெற்ற மெய் கண்டான் மகாநாடு முதலியவற்றைத் திறம்பட நடத்தி ஆதீனத் திற்கு அரும்பணி புரிந்தார்கள். ஆதீன சமயப்பிரசாரக் குழுவின்

தலைவராயிருந்து தமிழ்நாடெங்கணும் சமயப் பிரசாரஞ் செய்தார்கள்.

முடிவாகக் கூறுமிடத்து மௌனசுவாமிகள் சிறந்த தவ ஒழுக்கமும் நிறைந்த கல்வியும் தெளிந்த ஞானமும், கனிந்த மனமும் படைத்துத் தமது பேச்சையும் மூச்சையும் வாழ்க்கையினையும் சமயப் பணிக்கே செலவிட்ட சான்றோர் ஆவார்கள்.

இத்தகைய பெரியார் தமது 80ஆம் ஆண்டில் திருவாரூர் தருமை ஆதீன அரசன் கட்டளை மடத்தில் 25—11—1958அம் நாள் பரிபூரணநிலை அடைந்த செய்தியை இந்துப்பத்திரிகையில் கண்டு திடுக்குற்றேன். இப்பெரியார் பிரிவு சைவத்தமிழுலகிற்கும் தருமை யாதீனத்திற்கும் ஈடிலா இழப்பாகும். இவ்வடிகள் ஆலவாய்ச் சோக்கேசர் அடியின்கீழ் என்றும் இன்புற்றிருப்பார்களாக!

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

1—11—58 இன்று பகல் 10-30 மணிக்கு புள்ளிருக்குவேளூர்ப் பிரானை வணங்க வந்தோம், தலவிருட்சமாம் வேம்பின் தண்மையும் ஈசன் அம்மன் சன்னிதிகளும் மிகவும் உள்ளங் கவர்தன்மையது. தருமபுர ஆதீனத் தம்பிரான் சுவாமிகளது மேற்பார்வையில் கோயிலின் தூய்மை பாதுகாக்கப்படுகின்றது. கோயிலினுட் புகும்போதே எவருள்ளத்தும் இறையுணர்ச்சி ஏற்படும் என்பதற்கையமின்று இங்குறையும் வைத்தியநாதன் உடல் நோயுடன் பவ நோயும் தீர்க்க வல்லான். ஓதுவாரின் இன்னிசையும் உள்ளங்கவருந்தன்மையது.

ஓம்தத்ஸத்

Achadanad,
Trivandam 1—11—58.

# செய்திகள்

## சித்தாந்தசாமியின் பத்தாம்நாள் வழிபாடு மாகேசுவரபூசை

**புலவர்மணி, வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள்**
திருவாரூர்.

அந்தமில் ஞானி அருளை அடைந்திட்டால்
அந்த உடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னரும் தோல்புவி உள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே (திருமந்திரம்)

அண்ணுமலையான் அழற் பிழம்பாய் ஓங்கி எழுந்த நாள் 25—11—58 திருக்கார்த்திகை நன்னுள். அன்று ஆரூரினின்றும் சத்திநிபாதம் கைவரப்பெற்ற ஒளி ஒன்று எழுந்து சென்று அண்ணு மலையானது பேரொளியில் கலந்தது. அவ்வொளி எழுபானேன் ருண்டுகள் சகலநிலையில் இம்மண்ணுலகில் வாழ்ந்து, முப்பதின் மூன்ருண்டுகள் திருக்கைலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் அடியவர் குழாத்துள் இருந்து, புறச்சமய இருள் கடிந்து சைவ ஒளி பரப்பிற்று. சுத்தாத்துவித முத்திநிலை எய்திய அவ்வொளிக்குக் குருமகாசந்நிதானம் அவர்களது அருளாணையின் வண்ணம் 4—12—58ல் பத்தாம் நாள் வழிபாடு இனிதின் நிறைவெய்தியது.

"ஈசன் எந்தை இணையடி நீழல் எய்திய" சுவாமிகளின் மூச்சேல்லாம் சித்தாந்தம். பேச்சேல்லாம் சித்தாந்தம். ஆதலின் மௌனம் சோமசுந்தரத் தம்பிரான் சுவ்ாமிகள் என்ற அவர்களைச் சைவ உலகம் சித்தாந்த சாமிகள் என்றே அழைத்துவந்தது. இவ்வுண்மையினைத் திருவுள்ளத்தடக்கிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஒருநாளுக்கு இருநாளாக ஆரூரில் சித்தாந்த மாநாடு நடப்பதற்கு ஆணை பிறப்பித்தார்கள் 3—12—58 மாலை 5 மணிக்குத் தருமை ஆதீனத்தின் சமயப் பிரசாரப் பேருந்து ஆரூர் இராசன்கட்டளையின் முன்வந்து நின்றது. ஆதீனத்தின் தவக்கொழுந்துகள் ஆதீனப் புலவர்குழாம் புடைசூழக் கட்டளை வாயிலில் காட்சியளித்தன. மாலை 6 மணிக்குச் சித்தாந்த மாநாடு தொடங்கப்பெற்றது.

பேரொளியிற் கலந்த அடிகளார் அவர்களே அருவநிலையில் அவைத் தலைமையைத் தாங்கத் திருபுவனம் கட்டளை ஸ்ரீமத், வித்துவான், இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் முன்னுரை கூறி

அனைவரையும் வரவேற்றார்கள். சித்தாந்த ரத்நாகரம் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் சிவஞானபோதத்தின் செம்பொருளைத் தம் நுண்மாண் நுழைபுலங்கொண்டு விளக்கம் செய்தார்கள். சென்னைப் பிரசார நிலயத்தமர்ந்து சைவ ஒளி பரப்பிவரும் ஸ்ரீமத். வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பிரிவெய்திய அடிகளார் ஆற்றிய அருஞ்செயல்களை எடுத்துரைத்தபொழுது

" அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் "

என்ற பொய்யா மொழியை மெய்யாம் மொழி ஆக்கிவிட்டார்கள். பின்னர் திருவுந்தியாரின் கருத்துக்களைத் தெள்ளத் தெளிய விரித்துரைத்தார்கள், அடுத்து ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் சித்தியாரின் பெருமையினை ஓர் விருத்தப் பாதியாலேயே விரித்துரைத்தார்கள். பின்னர் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் இருபா இருபஃது என்ற சாத்திர நூலின் பெருமையினை விரித்துரைத்தார்கள். இரவு 9-30 மணிக்குப் புலவர் மு. இரத்தின தேசிகர் நன்றி நவில மாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சி நிறைவுற்றது.

4—12—58 குருவாரம் காலை 10 மணிக்கு, சித்தாந்தச் செந்நெறிக்கு வழிகாட்டிய பொல்லாப்பிள்ளையாரை நினைவுறுத்துவதுபோல நற்குஞ் சரக்கன்று வழிகாட்டக் கட்டளை மடத்தினின்றும் முனிபுங்கவர்களும் புலவர்களும் பிறரும் மங்கலப்பல்லியம் இயம்ப அரகர முழக்கத்துடனும் சிவபுராண முழுக்கத்துடனும் புறப்பட்டு, சுவாமிகள் சமாதிகூடிய ஞானப்பிரகாசன் கொல்லையை எய்தினர். 1886-ல் ஆரூரில் பிறந்த அளவானே சித்தாந்த சாமிகள் முத்திப்பேற்றிற்கு உரியவர்கள் என்பது உறுதிசெய்யப் பெற்றது. அதன்மேலும் அவர்கள் தருமை ஆதீனத்தின் அடியவர் குழாத்துள் ஒருவராய் அமர்ந்தநாள்தொட்டுக் கிடந்தும், நடந்தும், இருந்தும் "ஞானப்பிரகாசரின்" நினைவே நினைவாக இருந்தார்கள். "மீண்டும் பிறப்புண்டேல் ஞானப்பிரகாசரின் அடியனாகவே பிறப்பேன்" என்று அவர்கள் பலமுறை சொல்லிவந்ததுண்டு. முதிர்ந்த அதிதீவிர குருபக்தி அன்னவர்களை வாழ்வின் இறுதி நாளிலும் ஆரூரிலே வாழச்செய்து "ஞானப்பிரகாச சுவாமிகள் சிவபூசை புரிந்த பூசைமடத்திற்குப் பக்கத்திலேயே சமாதி கூடச்செய்தது என்றால் அவர்கள் குருவருளால் திருவருள் பெற்றார்கள் என்பது உண்மையன்றோ ?

சமாதி வழிபாட்டிற்குக் கொல்லையின் எல்லையை அடைந்த கணத்தில் திருவண்டப்பகுதியினைக் கூறிவந்தவர் "பரமானந்தப் பழங்கடல் அதுவே" என்ற தொடரைக் கூறினர். சுவாமிகளின் சமாதிமேடையும் அனைவர்கண்ணின் முன்னர்க் காட்சி அளித்தது. அத்தொடரின் ஈற்றுச்சொல்லாகிய "அதுவே" என்பதை அடுத்துக் கூறியபொழுது ; அனைவரும் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்து மெய்மயிர் சிலிர்த்துச் சமாதி மேடையின் மீது இருந்து சிவ லிங்கத் திருமேனியினை நோக்கி வணங்கி அரகர முழக்கம் செய்தனர்.

இராசன் கட்டளை விசாரணையை அடுத்து மேற்கொண்ட ஸ்ரீமத். வித்துவான், மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ஏற்ற முறையில் அபிடேக ஆராதனைகளைச் செய்தார்கள். வழிபாட்டிற்கு ஸ்ரீ தியாகராஜஸ்வாமி ஆலய நிருவாக அதிகாரி அவர்களும் உள்துறை டிரஸ்டி அவர்களின் பிரதிநிதியாகத் திரு. G. R. தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்களும் நகரப் பெருமக்கள் பலரும் வந்திருந்தனர்.

பகல் 11-30 மணி அளவில் போற்றித் திருவகவல் பாரா யணத்துடன் அனைவரும் கட்டளை மடத்தின் எல்லையை வந் தடைந்தார்கள். போற்றித் திருவகவலைக் கூறிவந்த சித்தாந்த ரத்நாகரம், முத்து. சு, மாணிக்கவாசக முதலியார் அவர்கள்.

"என்னையும் ஒருவனாக்கி யிருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி"

என்ற அடிகளைக் கூறியபொழுது சித்தாந்தசாமிகள் முத்து. சு. அவர்களுக்குச் செய்த அருளுதவியை எண்ணி உருகித் தம்மைத் தருமை ஆதீனத்தின் அடியவனாகச் செய்த அந்நாள் நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்,

நண்பகல் 12 - 30 மணிக்கு மாகேசுவர பூசை இனிதின் நிறைவுற்றது. மாலை 5 மணிக்குச் சிவபுராண பாராயணத்துடன் அனைவரும "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்ற மெய்மொழியினை மெய்ப்பிக்க மகாசந்நிதானம் அவர்கள் ஆணை யிட்டிருந்தபடியே ஆலயம் நோக்கிச் சென்றனர். சித்தீச்சுவரம் தட்சிணாமூர்த்தி சுவாமிகளின் முன்னிலையில் இராசநாராயண மண்டபத்தே இரண்டாம் நாள் மாநாடு தொடங்கிற்று. ஸ்ரீமத் வித்துவான் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவைத் தலைமை தாங்கினார்கள். புலவர்மணி, திரு. மு. இரத்தின தேசிகர்

பிரசங்கபூஷணம், திரு. ச. க. தியாகராச பிள்ளை, ஸ்ரீமத் முத்துக் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், ஸ்ரீமத் சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள், பேராசிரியர், திரு, வி. சபேசன், பேராசிரியர். திரு ம, சிவசம்பு ஆகியோர் சாத்திர நூல்கள் பலவற்றை விரித் துரைத்தனர்.

அம்மனூர் சதாசிவ அடிகளார் அவர்கள் சித்தாந்த சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்துரைத்தார்கள். இரவு 8-30 மணிக்கு இராசன் கட்டளை விசாரணை ஸ்ரீமத். வித்துவான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் நன்றிகூற மாநாடு இனிதின் நிறைவுற்றது.

வந்திருந்தார் அனைவருக்கும் ஞானபூசை விதி, திருமுறைப் பெருமை, ஞானப்பிரகாசர் வரலாறு முதலிய நூல்கள் வழங்கப் பெற்றன. வார வழிபாடு அன்று தோட்டு ஆரூரில் நடைபெற வேண்டுமென்ற குருமகாசந்நிதானம் அவர்களின் ஆணையின் வண்ணம் ஆலய வழிபாடு தொடங்குப்பெற்றது. திருவருள் துணை செய்ய வழிபாட்டுக் கூட்டம் தொடர்ந்து நடைபெறும்.

சித்தாந்தசாமியின் திருப்பணிகள் வாழ்க.

## நன்றி

உள்துறை நிர்வாகம் ஸ்ரீ. C. D. சோபாலன் அவர்களும், கோயில் ஆணையர் திரு. S. R. கோவிந்தராஜலுநாயுடு அவர்களும், உள்துறை மானேஜர் திரு. சிவசங்கரத்தேவர் அவர்களும், போர்டு இன்ஸ்பெக்டர் திரு. M. கிருஷ்ணன் அவர்களும் உ-நாள் நிகழ்ச்சி யிலும் கலந்துகோண்டு செய்த தோண்டு மிகவும் பாராட்டத்தக்கது. ஸ்ரீ. C. D. கோபாலன் அவர்கள், சித்தாந்தசாமிகளைக் குறித்துப் பாடிய பாடல்களும் மாநாட்டில் படிக்கப்பட்டன. அவை ஞான சம்பந்தத்தில் வேளியிடப்பட்டுள்ளன. இவர்கள் எல்லோர்க்கும் நன்றி. திருவருள் இவர்கட்கு நலமேலாம் நல்குக.

திருவாரூர்,
6—12—58.

**வித்துவான், மகாலிங்கத் தம்பிரான்.**
**கட்டளை விசாரணை, இராஜன் கட்டளை.**

# திருச்செந்தூரில் செவ்வேள் நோன்பு

தருமைக் குருநாதர் 10—11—58 காலையில் திருமஞ்சனம், ஸ்ரீ சோக்கலிங்க பூஜை யெல்லாம் முடித்துக்கொண்டு, காலையில் எழுந்தருளி. இரவு 10 மணியளவில் திருச்செந்தூரைச் சார்ந்து தங்கியருளினார்கள்.

11—11—58 முதல் செவ்வேள் நோன்பு தொடங்கிற்று (ஸகந்த ஷஷ்டி விரதாரம்பம்), நாள்தோறும் வைகறையில் 4-30 மணிக்கு ஸ்கந்த புஷ்கரிணியில் திருமஞ்சனம் ஆடல். விசுவரூப தரிசன வழிபாடு. திருமடத்திற் சேர்தல். மாலையிலும் அவ்வாறே திருமஞ்சனம் ஆடல் அபிஷேகம் அர்ச்சனை செய்வித்தல் தரிசனம் செய்தல், ஆறுநாளும் இருவேளையும் அபிஷேகம் 'பூவான மூன்று முந்நூற்றறுபதுமாகும்' சகஸ்ரநாமார்ச்சனை புரிவித்தல், நோன்பாளர் பலர்க்கும் கோயிலில் நிவேதிதம் ஆன பால் பழம் அளித்தல் நிகழ்ந்தன.

14—11—58 வெள்ளிக்கிழமை ஷண்முக நாயனார்க்கு ஷண்முகார்ச்சனை செய்வித்து, ஒரு மகரகண்டிகை [இரண்டாயிரம் (2000) வெண் பொற்காசுகள் மதிப்புடைய உருத்திராக்ஷமாலை] ஆறுமுகப்பெருமானுக்குச் சார்த்திக் கண்டு கண்டு கண்குளிர வுள்ளங்குளிரப் பெற்றார்கள்.

16—11—58 ஞாயிறு செவ்வேள் நோன்பு நாள் (ஷஷ்டி விரததினம்), மூலவர்க்கு விசேஷ அபிஷேக ஆராதனை. பழநி மலையிற் செய்யும் வண்ணம் பஞ்சாமிர்தாபிஷேகம் புரிவித்து, எல்லோர்க்கும் அளிப்பித்து இன்பம் விளைவித்தார்கள்.

அன்று மாலையில் ஆணவரூப சூரசங்காரம். முருகக் கடவுள் எழுந்தருள உடன் எழுந்தருளித் திருச்சீரலைவாயில் (கடலோரத்தில்) ஐம்பதினாயிரம் அன்பர் கூட்டத்திடையில், சூரனைச் சங்கரிக்கும் திருவிழாவைத் தரிசித்தார்கள்.

17—11—58 திங்கட்கிழமை ஏழைகட்கு அன்னம் பாலித்தருளினார்கள். மாகேசுர பூசை நிகழ்த்துவித்தருளினார்கள். அன்று மாலையில் திருநெல்வேலியை உற்று நெல்லையப்பரையும் வடிவம்மை (காந்திமதியம்மை) யையும் வழிபட்டார்கள், நெல்லைத் திருமடத்தில் இரண்டுநாள் எழுந்தருளியிருந்தார்கள், வெள்ளிக் கிழமை கன்னியாகுமரியில் தரிசனம், மீண்டு சனிக்கிழமையில் நெல்லையில் வதிந்து, ஞாயிறு புறப்பட்டு, திருப்பரங்குன்றும்

மதுரைத்திருவாலவாயும் தரிசித்துக்கொண்டு தருமையில் எழுந்தருளினார்கள். வாழ்க ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம். வளர்கதிருவருட் செல்வம்.

## திருவாவினன்குடி(பழநி மலை)யில்

5—12—58 குருவாரம் மாலை 3-45 மணி, பழநிமலையை அகத்திற்கண்டு கொண்டே புறத்தில் உந்தூர்தியில் எழுந்தருளினார்கள். இரவு திருவாவினன்குடியைச் சார்ந்தார்கள். 6—12—58 சுக்கிரவாரம் வைகறையில் நித்திய பூஜையை முடித்துக்கொண்டு, விசுவரூபதரிசனம் செய்தார்கள். 8 மணிக்கு அபிஷேகம் தொடங்கி 10-15 மணிக்கு முடிந்தது. பழநிமலையில் ஏழைகளுக்கு அன்னம் பாலித்தருளினார்கள். மாகேசுரபூஜை புரிவித்தார்கள். 6—12—58 திருவையாறும் சுவாமிமலையும் தரிசித்துக்கொண்டு தருமைக்கு எழுந்தருளினார்கள். வாழ்க தருமைக் குருமணி. வளர்க அவர்கள் அருள்வழிபாடு.

## திருவண்ணாமலையில் சமயப்ரசாரம்

தருமையாதீன சமயப் பிரசாரக் குழுவினர் வழக்கம்போல் இவ்வாண்டிலும் திருவண்ணாமலைத் திருவிழாவில் பிரசாரம் செய்தனர். 24—11—58 திங்கட்கிழமை மாலை சக்தி விலாசத்தில் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரம் நடந்தது. துறைசை ஆதீன வித்துவான். வீர. சிவசுப்பிரமண்யம் அவர்களும் தருமையாதீனப்புலவர், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். 25—11—58 செவ்வாய்க்கிழமை காலை சென்னை அறநிலையங்களின் ஆணையர் உயர்திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L, I. A. S, அவர்கள் உடன்போந்து மலைவலம் வந்தார்கள். பல இடங்களில் 'ஹரஹர' முழக்கம் செய்து அன்பர்கள் உள்ளம் அண்ணாமலையாரை மறவாது போற்றச்செய்தது. மீண்டும் பிரசார வாகனத்தில் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், திரு. வீர. சிவசுப்பிரமண்யம், தருமையாதீனத் தொண்டர் திரு, கோ. சிவஞானம், ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் திரு. ம, சிவசம்பு முதலியவர்களும் மலை வரும்வழியில் ஆங்காங்குச் சொற்பொழிவு செய்தனர். திரு. R, வேலாயுத ஓதுவாமூர்த்திகளும் பாடசாலை மாணவர்களும் திருமுறைப் பாடல்கள் பாடினார்கள், 'திருவண்ணாமலைத் திருக்கார்த்திகை விளக்கு' என்ற ஆதீனம் இலவச வெளியீடுகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. கூட்டம் இருக்கும் இடம் தேடிச்

சென்று பிரசாரம் செய்வதை சென்னை அறநிலையங்களின் ஆணையர் திரு. உத்தண்டராமப் பிள்ளை அவர்கள் மிகவும் பாராட்டினார்கள். அவர்கள் அரிய முயற்சியால திருவண்ணாமலையில் கூத்தப் பெருமான் சந்நிதியில் திருமுறைப் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருமுறைப் பாடல்களைப் பாடும் போழுது பக்தி வெள்ளத்தில் மூழ்கிக் கடவுள் வாழ்த்துப் பாடும்போழுது தாமும் மெய்ப்பாடுண் டாகப் பாடிப் பரவசமுற்றார்கள். அவர்களுக்கு இயல்பாக உள்ள தெய்வத்தொண்டும் தெய்வபக்தியும் அன்று பலரும் அறிய வாய்ப் புண்டாயிற்று. திருவண்ணாமலையில் நடந்த பிரசாரத்தைக் கண்ட மக்கள் ஆதீனத்தையும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தையும் போற்றிப் புகழ்ந்தார்கள்.

## கடிதம்

சம்பந்தசரணாலயத் தம்பிரான் (C. K. S.)

கோயம்புத்தூர்
3—12—58

ஸ்ரீமத். சுவாமிகளுக்கு வணக்கம்.

ஸ்ரீமத். மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சிவபத மடைந்தமை இன்றுதான் தெரிந்து வருந்தினேன். சைவத்துக்கும் நமது ஆதீனத்துக்கும் பெரிதும் நஷ்டம். அவர்களது இன்னுயிர் இறைவன் திருவடிக்கீழ் அமைதிபெற்றின்புறுவதாக. மகாநாடு சிறப்பாய் நடைபெறுவதாக. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களிள் திரு வடிகளுக்கு என் வணக்கம்.

அன்புள்ள
சம்பந்தசரணாலயத் தம்பிரான்.

"சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக"

இளைஞர் அருள்நெறி மன்றம்

திருக்கோணமலை (இலங்கை)

2—12—1958

அருட்டிரு சுவாமி,

தங்களின் அன்புத் திருவடிகளுக்கு அடியேனின் பலகோடி வணக்கங்களைத் தங்கள் திருவடியில் பணிந்து அன்புடன் ஒப்பிக்

கின்றேன், தயவுகூர்ந்து ஏற்றருளுக, தங்களின் அருளாட்சியின் கீழ் அமைந்து பணியாற்றிவரும், திருவாரூர் இராஜாங்கக்கட்டளை தேவஸ்தானம் தம்பிரான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான்சுவாமிகள் அவர்கள் செம்மேனி எம்மானின் திருவடி நிழல் அடையப்பெற்ற வருத்தத்திற்குரிய சோகச் செய்தியினைத் தமிழகத்திலிருந்து வெளி வரும் 26—11—58 நாளிட்ட தினமணி புதினத்தாள் மூலம் அறிந்து பெரும் வருத்தமடைந்தோம். அத்துடன் சிவபதமடைந்த தம்பிரான் சுவாமிகளின் ஆத்மா சாந்தியடையவேண்டி மேற்படி மன்றத்தின் மாலை வழிபாட்டின்போது திருவருளைச் சிந்தித்து வேண்டிக்கொண்டோம் என்பதையும் தங்களின் திருவுளதத்தின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அத்துடன் மேற்படி மன்றத்தின் தலைவர் முதற்கொண்டு உறுப்பினர்கள் அனைவர் சார்பிலும், திருஞானசம்பந்தப் பெருமானுல் அருட்பாடல் பெற்ற திருப்பதியாம் திருக்கோணமலை சிவநெறித் தமிழ்ப்பெருங்குடி மக்கள் சார்பிலும் அனைவரினதும் ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தங்களின் அன்புத் திருவடிகளில் தாழ்மையுடன் பணிந்து தெரிவித்துககொள்வதுடன் அமைகின்றேன். தங்களின் திருவுளத்தின் அன்பும் - ஆதரவும் மாசில்லா வாழ்வுக்கு எம்மை வழிநடத்திச் செல்லுமாக. எல்லாம் திருவருள் விட்டபடி. "என்றும் வேண்டும் இறவாத இன்ப அன்பு" வணக்கம்,

அத்துடன் தங்களின் திருவுளத்தின் அன்பும் அருளும் பல்லாண்டு இப்புவியில் வாழ்ந்து சிவநெறித் தமிழ்ப் பெருங் குடிக்கு என்றும் பணியாற்றி எமக்கு வழிகாட்ட எல்லாம்வல்ல கோணமாமலை அமர்ந்துறையும் எம்பெருமானின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்ருேம்,

இவ்வண்ணம்,

தங்கள் திருவடி அன்புள்ள - பணிவுள்ள,

இ, சண்முகராசா.

கும்பகோணம்
7—12—58

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திவ்ய போற்பாத கமலங் களில் அடியேன் கந்தசாமி அநேக நமஸ்காரம் செய்து எழுதிக் கொண்ட விண்ணப்பம்.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இறைவன் திருவடி நிழலை எய்திய செய்தி குருமகாசந்நிதானத்திற்கு ஒரு வகையில்

மனச்சாந்தி அளிக்குமாயினும், எம்போலியர்களுக்கு மாயையின் வலேயிலிருந்து ஒரு சிறிதும் நீங்காத நிலேயில், வருந்தக்கூடிய செய்தியாக உள்ளது. குறள் கூறுகின்றது, யாக்கை நிலே இல்லேயென்று சாஸ்திரங்கள் அறைகின்றது பிறவியை நீக்கு என்று. பிறவியால் வருவது துயரமே ஆகும். போய்யை மெய் யென்று நம்பி, புலன்கள் வாய்ப்பட்டு உழலுகின்ற நிலேயினின்றும் தவிக்கின்ருேம். யாக்கை நிலே இல்லே என்பதையும் கண்கூடாகப் பார்க்கின்ருேம். சற்றுமுன் இருந்தவன் இல்லே என்பதையும் அறிகின்ருேம். இறப்பதற்கு என்கடவேன் என்று அஞ்சுகின்ருேம் அதை நினேக்கவே நேஞ்சு பகீரேன்கிறது என்று ஒரு பேரியார் கூறுகிருர். இப்படியிருக்க அறிவிலி ஏழைகளாகிய நாங்கள் எங்ஙனம் இந்த மாயா சக்தியை வேல்ல முடியும்! ஆனுல் வேல்லக்கூடியவர்கள் துறவிகளே, அவர்கள் கற்றதனுலாய பயன் வாலறிவன் நற்ருள் தோழவேண்டுமேன்றும், தோழுதால் பிறவிக்கடலே நீந்தமுடியுமேன்றும், பிறவியை ஒழிப்பதே மக்களின் கடமை யென்றும் அதற்காவன புரிந்து வருகிருர்கள். அம்மையார் வேண்டினுர், பிறவாமை வேண்டுமேன்றும், அப்படிக்கின்றிப் பிறவி உண்டானுல், அரனே மறவாதிருக்கவேண்டுமேன்றும், வரம் கேட்டார். பிறவி ஏற்பட்டால் அவன்தாளே மறவாதிருப்பதே விருப்பமேன்றும் பல பேரியார்கள் கேட்டுள்ளார்கள். நோக்கம் என்ன ?

அணுவாகிய ஆத்மகோடிகள், மாயாவலேயில் சிக்குண்டு பல பிறவிகள் எடுத்து உழன்று வரும் நிலேயினின்று நீங்கி, நற்கருமச் செயலால், இருவினேநீங்கி, இறைவன் அடிநிழலாகிய பேரின்பத்தை அடையவேண்டுமேன்பதே, அங்நிழல் மாசில்வீணேயும் மாலேமதிய மும் வீசுதேன்றலும், — போன்றதே.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், தான் செய்த பூர்வபுண்ணிய பலத்தால், தருமபுர ஆதீனத்தை அடைந்து, துற வறம்பூண்டு நற்கருமம் செய்து, புண்ணிய பதவியை அடைந்ததை முன்னிட்டு, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பாராட்டு மகாநாடு கூட்டியும் மாகேஸ்வர பூஜை செய்தும் அடியார்களுக்கு நல்லறிவு உணர்த்தியுள்ளார்கள். அடியேனும், பேரியாருக்கு மன, மோழி, மேய்களால் வணக்கத்தைத் தேரிவித்துக்கோள்ளுகிறேன்.

ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஒரு துறவியாய் இருந்தும், இறுதிவரை ஒரு கர்மயோகியாகவே விளங்கினுர்கள். அவர்கள் செய்துள்ள பல தோண்டுகள், நமது தருமை மடத்தின் பேருமைக்கு ஒரு வித்தாகும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைச் சார்ந்ததால், குருவருளால் ஞானமெய்தி வீடுபேறுற்றார். அவர்களை இறைவனாகப் பாவித்து வணங்குவேனாக.

இப்படிக்கு அடியேன்,
M. Kandaswami.

திருவாவடுதுறையாதீன வித்துவான், 40, பேட்டைவடக்குத்தெரு
சித்தாந்த சைவமணி, கும்பகோணம்.
த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை. 26—11—1958.

திருவாரூர் இராசன்கட்டளை, மௌன ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சிவபரிபூரணம் உற்றமை குறித்து ஆற்றாது பாடியவை.

கயிலாய பரம்பரையிற் றிருத்தருமை யாதீனம்
கவினுற் றோங்கப்
பயிலுமுயர் சித்தாந்த சைவநெறி யினிற்சிறக்கப்
பரிவிற் றேர்ந்தாய்
துயிலுடனே அயிலுதலும் விரும்புகிலாய் மனத்தகத்தும்
துறவு மிக்காய்
செயலொன்றும் சிந்தியாய் சித்திநெறி வளர்த்தற்கே
சிந்தை கொண்டாய். 1

உனையறிந்த நாண்முதலா என்னுள்ளம் கொள்ளைகொண்ட
வுயர்வெல் லாமும்
பினையறிந்து சிந்திக்க வியலாமல் புவிவீட்டுப்
பிரிந்தாய் அந்தோ !
கனவினிலும் நனவினிலும் சிவம்நினையா நாளுன்பால்
காணே னாதே
சொனசொல்லை மாற்றுகிலாச் சோமசுந் தரமுனிவ !
துறந்த தென்னே. 2

இரும்பூளைத் தலக்கும்பா பிடேகத்தில் மாநாடொன்
றியற்ற வெண்ணி
அரும்பாடு பட்டலைந்து வேடம்பூர் வாசிகளால்
எளிதிற் சென்னை
தருஞ்சைவ சித்தாந்த சமாசமதை வரவழைத்துத்
தலைவ ராக
விரும்புதிரு வாலையா னந்தவடி களையழைத்து
வெற்றி கண்டேன். 3

என்னேளிய திருத்தொண்டைப் பேரிதாக மதித்திரும்பூ
தேய்தி யேன்றும்
நன்னேறியா கியசைவ சித்தாந்த சமயமிந்த
நாட்டில் மல்க
முன்னணியில் எனைவைத்துக் காக்கவுளம் பேரிதுற்று
முயன்ற செல்வா !
பின்ஞேன்று பேசுகிலாச் சோமசுந் தரமுனிவ !
பிரிந்தா யேன்னே. 4

தருமைவரு மிருபான்மூன் ருங்குரவன் சுப்ரமண்ய
ஆசான் தன்பால்
ஒருமையினிற் கல்லாடை முதலாக வேல்லாமும்
உவந்து பேற்றே
பேருமையினிற் சிறிதளவும் பிறழாத அடிகேணீ
பேரிது மன்பிற்
குருமணிதேன் முகப்பரமன் மனுசித்தி பேறுதற்காம்
குறிப்பி ஞேடே. 5

என்ஞேடுசில் லாண்டாலங் குடியினில்வந் தினிதுறைந்தாய்
இனிமை யாகப்
பன்னுசில பலநூல்கள் இடைவிடா தேபடித்தாய்
பகரி லுன்போல்
துன்னுமுயர் மடிமையிலாத் தூயவடி யவரேவர்கோல்
துகளி லாத
போன்னேநிகர் சோமசுந் தரமுனிவ ! இனிமேல்யாம்
புரிவ தேன்னே. 6

திருத்தோண்டில் இளையாத சிலர்பலரைத் திருக்கூட்டத்
தினிலே சேர்த்தாய்
கருத்தோன்றச் சித்தாந்த நூல்பயிற்ற வேணவேலாம்
கனிவிற் கோண்டாய்
போருத்தமிக மேய்கண்டான் மாநாடு கூட்டுவித்துப்
புகழ்கைக் கோண்டாய்
அருத்தியுடன் அருகிருத்தி எனைத்தருமைக் குரவர்கள்பால்
அன்பிற் சேர்த்தாய். 7

சற்றேறக் குறையமுப்பான் மூன்ருண்டின் மேலாய்நீ
தருமை சேர்ந்து
கற்ருேர்கள் கூட்டம்நனி விளக்கமுறக் கண்டதோடு
கல்லா தாரும்

பற்றுமிகப் பலவகையா னும்போற்ற அழைத்தழைத்துப்
பல்காற் கூட்டிச்
சுற்றமிக வைத்தனையே சோமசுந் தரப்பெயரால்
துதைந்த கோவே. 8

சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌனமட மேற்பார்வை
சிவனும் போது
இராப்பகலாய்த் திருமுறைசாத் திரபாடம் சொலநல்ல
இடமா வைத்தாய்
அராப்புனைந்த வையாற்றுக் கடவுள்தளி யினிற்பலகால்
அமைத்து வைத்த
பராபரன்பன் னிரண்டுதிரு முறைவிழாப் பெருமையினைப்
பகரப் போமோ. 9

புள்ளிருக்கு வேளூர்க்கட் டளையினில்நீ பணியாற்றும்
பொழுது மங்கே
எள்ளிருக்க விடமின்றிப் பெருங்கூட்ட மினிதமைத்தாய்
இறும்பூ தாலே
உள்ளிருக்கு மன்பொருங்கே யூற்றெடுத்துப் பலதிசையு
மோடு மாப்போல்
பொள்ளெனநற் பிரசார வாகனமொன் றமைத்தெங்கும்
போகச் செய்தே. 10

சித்தாந்த சைவமிந்த நாட்டிடையே மக்களுளம்
தேக்கு மாறு
சித்தமகிழ் வுடன்சென்னை நகரமக்கள் உளந்தரிக்கத்
தேர்ந்தன் பாலே
இத்தரையோர் மதிக்கவொரு பிரசார நிலையமங்கும்
இணையி லாமே
வித்தகமாய்த் தோற்றுவித்தாய் சோமசுந் தரமுனிவ !
விரைந்த தெங்கே. 11

என்னையுமென் மகனையுநீ தருமபுர வாதீனத்
தெழிலார் காவி
மன்னுமுடை தனைப்பெற்றுச் சித்தாந்த சைவநனி
வளர்த்து வாழ்வாய்
என்னுப்பன் முறைவாதிட் டொருசிறிதும் பலியாமை
இனிதிற் கண்டும்
தன்னிகரில் சோமசுந் தரமுனிவ ! மனந்திரியாய்
சற்று மென்னே. 12

என்னைநினைந் தனுதினமுந் தருமையினிற் றிருக்கூட்டத்
திருத்திக் காணப்
பன்னுமுறை களைநினைந்தே யுனைப்பிரிந்த துயரமென்னல்
பகரப் போமே
மின்னைநிகர் தருமிந்த வுடலமென வறிந்துவைத்தேன்
மேதி னிக்கே
அன்னையென அன்பொருவாச் சோமசுந் தரமுனிவ!
அகன்று யங்தோ. 12

தமிழ்ப்புலவர் கூட்டமுன்னல் தருமையினிற் குழுமியதைத்
தமிழர் சொல்வார்
தமிழ்ப்புலவர் கூட்டமேவண் குழுமினுமுற் படநிற்கும்
தகவு ளானே!
தமிழ்ப்புலவர் உனைப்பிரிந்த சங்கடத்தை யேவ்விடத்துச்
சார்ந்து தீர்ப்பார்
தமிழ்ப்புலவர் மனத்தகலாச் சோமசுந் தரமுனிவ!
சார்ந்த தெங்கே. 14

குருஞான சம்பந்த தேசிகனை யாங்களெலாம்
கொலுவிற் காணோம்
உருஞான சம்பந்த னெனவுளத்தி லுறுதிபெற
வுன்னைக் கண்டோம்
திருஞான சம்பந்த ரவதரித்த புகலியினிற்
சிந்தை மிக்காய்
தருஞாலம் கவல்கொள்ளச் சோமசுந் தரமுனிவ!
சார்ந்த தெங்கே. 15

இங்ஙனம்,

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

வையகத்திலே விளம்பி வந்துதித்த கார்த்திகையில்
செய்யவொளி தீபதினம் பத்தாநாள் — மெய்யரவம்
பூண்டான் அடிசேர் புகழ்சோம சுந்தரனு
ஆண்டான் எமைஅடிமை அன்று.

தாயாகித்தண்ணளியாற்றந்தையாய்த் தண்டித்துத் திருத்துமாற்றல்
சேயாகி யன்பினல் செய்வனவே தீருந்தச்செய் செயல தாலே
மாயாத பொருணிறையு மன்னனு மகிழ்ந்தேவர்க்கும் வழங்குமாற்
ஓயாத வள்ளலாய் ஒளிர்சோம சுந்தரனும் ஒள்ளி யோனே. [ருல்

நிருவாகத் திருந்துநிகழ் முப்பான்மூன் ருண்டுநலம் நிலவநின்ருய்
உருவாகத்திருப்பணிகள்பலசெய்யஉளங்கோண்டஉறுதிசான்ருேய்
மருவாரும் மிகமருவ மாவிளம்பி மதியாரல் வளர்பத்தாம் நாள்
கருவாரப் பெருநேறியில் சேவ்வாய்நாட் கலந்தேம்மைக் கலங்க
வைத்தாய்.

உலகத்துச் சைவநலம் ஓங்கிடவே யோசனைகள் உறுவ தற்கோ
திலகமேனுந் திருஆரூர்த் தியாகேசன் திருப்பணியைச் சிரமேற்ருங்கி
இலகலுற இவ்வுலகத் தியற்றற்கோ இன்பமுடன் என்று மாளாப்
பலகலேயின் சிரமாய பரகலேயைப் படித்தற்கோ பறைந்தாய் ஐயா,

நின்னுடையபெரும்பிரிவால் தமிழ்உலகம் நிகரில்லாத்துன்பமேய்தும்
இன்புடைய பெரியோர்கள் இருந்துயரக் கடனின்று ஏற கில்லார்
நன்கவியில் நயமுணரு நாவலர்கள் பெறுதுன்பம் நவில வற்ருே
மன்னுபுகழ் மானிலத்தோர் வருத்தமோரு வரையறையில் வகுக்க
வற்ருே,

என்றினிநாம் புன்முறுவ லினிதுறையு மோழியமுதம் இயங்கக்
காணபோம்
என்றினிநாம் கருணைவழி இன்முகத்தின் இணைவிழியின் எழிலேக்
காண்போம்
என்றினிநாம் சைவத்து நேறியதனை வலிதாக்கும் ஏற்றம்காண்போம்
என்றினிநாம் வலியடக்கி மேலியார்க்கு ஏற்றம்சேய் தோற்றம்
காணபோம்.

இனிஎங்நாள் நின்னுரையை இனிக்கக்கேட் டின்புறுவோம்
இனிமை சான்ருேய்
இனிஎங்நாள் நின்முகத்தின் எழில்அசைவு கண்டுவப்போம்
எங்கள் தக்கோய்
இனிஎங்நாள்நின்கருணைதிறம்வைப்பேம்ஏறூர்ந்தான்அடியேயுற்ருய்
இனிஎங்நாள் நின்திறமை கண்டுவக்க இருக்கின்ருேம் இல்லேஇல்லே.

சுத்தமாம் அத்துவிதச் சோதியினில் கலந்திடும்எம் துதிசோல் ஐய
இத்தலத்தில்நினைப்பிரிந்தேஇன்னலுறும்நினக்குற்ருர்யாரும்இன்றே
பேத்தநிலேஅடைந்தஒன்றேகருதிமனம்ஆற்றுகின்ருேம்பிரியாமுத்தி
அத்தனருள் பேறமன்னி அழிவிலா இன்பநிலே அடைவாய்அண்ணுல்.

இங்ஙனம் அடியார்க்கடியேன்,

திருவாரூர், சி. து. கோபாலன்.

4—12—1958,

ச. சச்சிதானந்தம் பிள்ளை. 175A லாயிட்ஸ் ரோட்,
இராயப்பேட்டை, சென்னை-14.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத் தம்பிரான் ஸ்ரீமத் வித்துவான், மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்களுக்கு அன்பார்ந்த வணக்கம்.

திருவாரூர் இராஜன் கட்டளை விசாரணை ஸ்ரீமத், மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சிவபெருமான் திருவடி நீழல் எய்திவிட்டதைக் கேட்டுத் திடுக்கிட்டு வருத்தமடைந்தேன். அவர்கள் உவத்தற்காக, மாகேசுர பூஜையும், சித்தாந்த சாத்திர மாநாடும் நடப்பதுபற்றிய அழைப்பினைக்கண்டு, அவை சாலச் சிறந்தவை எனப் போற்றுகின்றேன். சென்ற நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் அவதரித்து, இந்த நூற்றுண்டில் 58 ஆண்டு வரை சீவன்முக்தராயிருந்து, சிவநெறி விளக்கிவந்த இப் பெரியார் அரும் பெரும் பண்புகள் பல படைத்தவர்கள், உண்மையான சீலமும் சிவபக்தியும், ஆழ்ந்தகன்ற சித்தாந்த ஞானநூற்புலமையும், நுண்ணிய பொருள்களையும் தெள்ளிதின் விளக்கும் ஆற்றலும், சைவ சமயப்பற்றும், அதனைக் காப்பதில் ஆர்வமும் நிரம்பப் பெற்றவர்கள். ஹிந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டங்களை அரசாங்கம் உருவாக்கிவந்த காலத்தில், நம் சுவாமிகள், ஒத்த நோக்கமுடைய பல சங்கங்களோடும் கலந்துகொண்டு தருமையாதீனத்தின் சிறந்த பிரதிநிதியாக விளங்கி, வெற்றிகரமாகப் பல மாநாடுகளை நடத்திச் சமயத்திற்குப் பேராபத்து விளையாவண்ணம் பாதுகாத்தருளினார்கள்.

அவர்களைத் திருச்சிராப்பள்ளி, புள்ளிருக்குவேளூர், திருவாரூர் முதலிய இடங்களில் காணும்பேறு தமியேனுக்கு வாய்த்திருந்தது. அவர்களது ஆன்ம நல மேம்பாட்டையும், அறிவு முதிர்ச்சியையும், அருட் பண்புகளையும் நேரிற் கண்டேன். அவர்களைப் பண்டைக் காலத்துச் சைவ மெய்த்திருவின் சார்பே சார்பெனப் போற்றுபவர்கள் என மதித்து வணங்கி வந்துள்ளேன்,

அவர்கள் இப்போது போல்லாங்கு மிகுந்துற்ற இப் புவியினை நீத்து, குறைவிலா நிறைவாயும் கோதிலா அமுதாயும் விளங்கும் இறைவன் ஒளியுலகை அடைந்துவிட்டார்கள், அடியனேன் போன்றோரெல்லாம் இன்று அவர்களிடம் வேண்டத்தக்கது ஒன்று தான்; கலியின் மலிவினால் நல்லோர் அல்லற்படும் இக் காலத்தில், நம் சுவாமிகள் நம்மை மறவாது, பசுபுண்ணியமும் பதிபுண்ணியமும் வளர்த்தற் கின்றியமையாத மாபெருஞ் சைவத்தைப் பாதுகாத்தற் காக முயற்சிகளை இங்குள்ள நல்லோர் செய்யும்போதெல்லாம்,

தோன்றாத்துணையாய் உடனிருந்து, அப்பணிகள் விழுப்பயன்விளைக் கச்செய்தருள வேண்டும் என்பதே அது. மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருவடி வெல்க.

அன்பார்ந்த அடியன்,

ச. சச்சிதானந்தன்.

M. நாராயணசாமிஐயர்,
ஓய்வுபெற்ற உபாத்தியாயர்,

சித்தர்காடு, மாயூரம் P: O.
3—12—58.

வணக்கம், சிவபிரான் திருவடி நிழல் எய்திய ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் குருபூஜை நிகழ்ச்சி நிரல் இன்று பெற்றேன், நன்றி. அவர் காலமான செய்தியை ஹிந்துப் பத்திரிகையில் படித்து வருந்தினேன். அவர் ஞானவிருத்தராயும், சீலவிருத்தரா யும், வயோவிருத்தராயும் இருந்ததுமன்றி மதப்பற்றில் அழுத்தமான உறுதியும், எல்லாவற்றிலும் இளைஞர்களுக்கும் அதில் ஊக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஆற்றல் உள்ளவர். திறமையும் தகுதியும் உள்ளவர்களை ஊக்கப்படுத்தி அவர்கள் மூலம் நமது மதப்பற்றும் ஒழுக்கமும் பரவ நிரம்பப் பிரசாரம் செய்யவேண்டுமென்ற அவா மிகுதியுடையவர். அவர்கள் என்போன்ற சாமானியர்களை வெகு இடங்களுக்கு அழைத்துச்சென்று பேசச்செய்து ஊக்குவித்திருக் கிறார்கள். அவர்களது சிறந்த சிஷ்யர்களான ஆரூர் திரு. மு இரத்தின தேசிகரும், திரு. ச. க. தியாகராஜ பிள்ளையும் பேச இருப்பது சாலப்பொருத்தமானது; போற்றத்தக்கது மாநாடு நன்கு நடைபெறப் பிரார்த்திக்கிறேன். வணக்கம், நன்றி.

மு. நாராயணசாமிஐயர்.

THE HINDU RELIGIOUS SCHOOL, WALAJABAD
Vallalar Students Home

Walajabad
2—12—58.

** அருள்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சிவபிரான் திருவடி நிழல் எய்தியது குறித்து நடைபெறும் மாகேசுவர பூசையும், சாத்திரச் சொற்பொழிவுகளும் ஆண்டவர் அருள் துணையால் நன்கு நடைபெறுமென நம்புகிறோம். எண்ணிறந்த மக்களுக்கு இறைவன் திருவருளை நினைப்பூட்டி, அவர்களோடு எம்மனோரை நன்னெறிச் செலுத்தும் தங்களுடைய திருவருட் பெருங்கருணைக்கு வணக்கம்.

பணிவுள்ள,

நா. தணிகை அரசு.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ கே, முத்துஜோதீடர் அவர்கள்,

திருவிடைமருதூர்.

(விளம்பி௵ மார்கழிமீ 1உ முதல் 29உ முடிய)

(16—12—58 முதல் 13—1—59 முடிய)

**1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

அசுவதி முதல் பாதம் சுபம் தரும். தேய்வ காரியங்கள் நடைபேறும். அசுவதி 2, 3, 4 பாதங்கள் இடம் மாறி லாபம் உண்டுபண்ணும். பரணி முதல் பாதம் சுகாரோக்கியங்களும், பந்து மித்திராளுடைய சேர்க்கையும் உண்டுபண்ணும். பரணி இரண்டாம் பாதம் இடம் மாறச்சேய்யும். கஷ்ட நஷ்டங்கள் காட்டும். பரணி 3, 4 பாதங்கள் நாஸ்திகத்தையும், துர்ப்புத்தி, துர்ச்சேயல்களையும், துஷ்ட சகவாசத்தையும் தந்து தீராத துக்க பலனைப் பலவிதத்திலும் காட்டும். தேய்வீகம் ஒதுங்கிப் போகும். விடாமுயற்சியால் தேய்வபலம் சேர்ந்தால் துக்கம் விலகும். புதன், வேள்ளி சுபமாகும். கார்த்திகை முதல் பாதம் வியாதி நீங்கிச் சுபமுண்டாகும்.

**2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½**

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் கஷ்டமாக இருக்கும். காரிய விக்னங்கள் உண்டாகும். ரோகிணி நான்கு பாதங்களும் சுவல்ப நஷ்டங்களைக் கொடுக்கும். வியாதிகள் ஏற்படச் சேய்யும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் விவசாய நஷ்டங்களையும், சத்துருபாதைகளையும், வீண் சேலவுகளையும் தரும். புதன் வியாழன் சுபமாகும்.

**3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் நஷ்டமுண்டுபண்ணும். திருவாதிரை 1, 2 பாதங்கள் சுபமாகும். வியாதி, கடன் நீங்கும்.

திருவாதிரை 3, 4 பாதங்கள் இடம் மாறச்செய்யும். தொழில் ஓங்கும். பெரியோர் அன்பு கிட்டும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் அசாத்தியமெல்லாம் சுலபமாக சாதிக்கச்செய்யும். ஜயமேற்படும். சத்துருபயம் நீங்கும். குடும்பம் ஓங்கும். சுப சந்தோஷமுண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் நாலாம் பாதம் வித்யா விருத்தியாகும். பெரிய பதவிகள் கிடைக்கச்செய்யும். பூசம் நான்கு பாதங்களும் மிசிரமாக நடக்கும். சுக துக்கம் சமமாகும். வரவு செலவுகள் சமமாகும். ஒவ்வொன்றும் பூர்த்தியாகாமல் தவக்கமாகவே நடைபெறச்செய்யும். ஸ்தாவர ஜங்கமங்கள் சேரும். ஆடை ஆபரணச் சேர்க்கைமூலம் அதிக செலவுகள் ஏற்படும். ஆயில்யம் நான்கு பாதங்களும் மகா சந்தோஷத்தைத் தரும். விவசாயத்தில் விசேஷ லாபத்தைத் தரும். கடன் நீங்கும். பிராசீனம் சித்திக்கும். ஆடம்பர வாழ்க்கை உண்டுபண்ணும். புதன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் நான்கு பாதங்களும் உயர்பதவிகளையும், இடம் மாறி லாபங்களையும் உண்டுபண்ணும். பூரம் நான்கு பாதங்களும் வியாதிமூலம் செலவுகள் அதிகமாகும். குடும்பத் தொல்லைகளும் தொழில் கவலையும் காட்டும். உத்திரம் முதல் பாதம் கடனும் வியாதியும் உண்டாகும். விரோதமும் ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்கள் லாபம் தரும். நன்மதிப்பு உண்டாக்கும். பெரியோர் அன்பும் தெய்வபலமும் ஏற்படும். ஹஸ்தம் நான்கு பாதங்களும் பொதுவாய் சுபமேயாகும். சமான பிரபுஜன பீடைகளையும், அதிக செலவினங்களையும் ஈதிபாதைகளையும், வியாதி பயத்தையும் காட்டும். தெய்வபலம் ஏற்படும். காரியம் சித்தியாகும். வெள்ளி, சனி சுபமாகும். சித்திரை 1, 2

பாதங்கள் லாபத்தைத்தரும். கடன் நீங்கி சுபமுண்டுபண்ணும். சந்தோஷமாகும்.

7. துலாம். சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

சித்திரை 3, 4 பாதங்கள் மஹாவிபவத்தோடு கூடின மங்களம் உண்டுபண்ணும். நூதன தொழில் மூலமும், மித்திரன் மூலமும் ஏராள லாபம் உண்டாகும். உலக மதிப்பு ஏற்படும். பெரியோர் அன்பும் கிட்டும். சுவாதி நான்கு பாதங்களும் தெய்வீகமாய் நடக்கும். எங்கும் புகழும் லாபமும் உண்டாக்கும். சகல காரியமும் சித்தியாகும். விசாகம் 1, 2, 3 பாதங்கள் மாதம் முற்பாதியில் அதிக நஷ்டம் உண்டாக்கி பிற்பாதியில் லாபமுண்டாக்கும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். சனி, செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் ¼, அனுஷம் - கேட்டை.

விசாகம் நாலாம் பாதம் சுபமிராது. வியாதியும் கடனும் விரோதமும் உண்டுபண்ணும். அனுஷம் சமபலன் தரும். இடம்மாறி தொழில் ஓங்கும். தூரப் பிரயாணம் ஏற்படும். கேட்டை நான்கு பாதங்களும் இடம்மாறிச் சுபமுண்டுபண்ணும். வியாதி பயம் நீங்கி ஆரோக்கியமும் ஐசுவரியமும் உண்டாக்கும். தெய்வபலம் கிடைக்கும். சந்தோஷம் ஏற்படும். புதன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

மூலம் நான்கு பாதங்களும் நிம்மதி இல்லாமல் நடக்கும். வியாதியும் மனக்குழப்பமும் ஏற்படும். பூராடம் முதல் பாதம் ராஜயோகமாய் நடக்கும். மனம் சாந்தியடையும். உத்திராடம் முதல் பாதம், வியாதியும் கடனும் நீங்கி ஆரோக்கியத்தையும் குடும்ப சுகத்தையும் தரும். தொழில் மேன்மை, தன விருத்தி ஏற்படல். ஆடையாபரணச் சேர்க்கை முதலிய சௌகரியங்கள் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾, திருவோணம் - அவிட்டம். ½

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் பந்தத்தில் மாட்டிவைக்கும். அதிகத் தொல்லைகள் ஏற்படும். திருவோணம் 1, 2 பாதங்கள்

குடும்ப கலகத்தையும், வீண் செலவுகளையும் சிறு மனஸ்தாபங்களையும், மனம் சாந்தி இல்லாமலும் இருக்கச் செய்யும். 3, 4 பாதங்கள் ஆடம்பர வாழ்க்கைகளையும் அலக்ஷிய சுபாவத்தையும், வீண் செலவுகளையும் உண்டாக்கும். அவிட்டம் 1, 2 பாதங்கள் வெகுநாளாக எதிர்பார்த்து நடவாத காரியங்களைச் சாதித்துக்கொடுக்கும். தொழில் ஓங்கும். இடம் மாறல் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்கள் சுபமாகும். ஆடையாபரணச் சேர்க்கையும், உத்தியோக உயர்வும் ஏற்படச் செய்யும். சதயம் நான்கு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். சிறு கஷ்டங்கள் ஏற்படும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் தன்நிலை அறியாமல் வீணான ஆடம்பர வாழ்க்கைகளைக் கொடுத்து அபவாதங்களையும் கொடுக்கும். புதன், சனி சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

பூரட்டாதி 4ம் பாதம் சுபமிராது. வீண் அலைச்சல்களையும், வியாதி பயத்தையும் தரும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் சுபமாகும். உத்தியோக மேன்மையோடும், கௌரவ பட்டங்களையும் கொடுக்கும். ரேவதி முதல் பாதம் மிகுந்த பயத்தைத் தரும். 2, 3, 4 பாதங்கள் பிறருக்கு ஹிதமாய் நடந்துகொண்டு காலம் கழிக்கச்செய்யும். கஷ்ட நஷ்டங்கள் சமமாகும். பூர்வ புண்ணிய பலம் முன்னின்று காக்கும். சனி, செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு:- ஷை மார்கழி மாதத்திலும் ஜனங்களுக்கு வியாதி பயத்தையும், பயிர்களுக்கும் தான்யங்களுக்கும் ஈதிபாதைகளால் கொஞ்சம் நஷ்டத்தையும் உண்டாக்கும். தெய்வீக பலத்தோடு இருக்கும் பிரதேசம் சுபிக்ஷமாகும்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## பதினேழாவதாண்டு மலர்ப் பொருளடக்கம்


| எண். | | பக்க எண். |
|---|---|---|
| 1 | அசீரண ரோகம் | 813 |
| 2 | அத்துவித வாதம் | 789 |
| 3 | அருமறையும் ஆகமங்களும் | 348, 424, 672, 746 |
| 4 | அவரைக்காய் | 430 |
| 5 | அளம்படு துரும்பு | 40 |
| 6 | அன்றும் இன்றும் | 679 |
| 7 | ஆக்கையால் பயன் என் ? | 169, 249 |
| 8 | ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி | 86 |
| 9 | ஆரூரர் மணத்தவம் | 217 |
| 10 | ஆவணிமூலத் திருநாள் | 651 |
| 11 | இலக்கியமும் சிவனும் | 631 |
| 12 | உண்மை விளக்கம் | 9, 81, 171, 255, 482 |
| 13 | எங்கள் குருநாதரும் ஸ்ரீகாசி வாசமும் | 325 |
| 14 | எங்கும் இலாததோர் இன்பம் பேற ஏழை பங்காளனையே பாடு | இதழ் 2ல் ரு |
| 15 | எதிர்காலம் | 77, 159, 235, 315, 387, 450, 515. 579, 647, 711, 769, 833 |
| 16 | எது வன்மை | 289 |
| 17 | ஐந்திர வியாகரணம் | 703. 736, 825 |
| 18 | கடவுள் இன்பத்துன்ப மில்லாதவர் | 796 |
| 19 | கடவுள் வாழ்த்து | இதழ் 1ல் உ |
| 20 | கடிதம் | 767 |
| 21 | கந்தபுராணம் | 773 |
| 22 | கல்லெழுத்துக்களில் மருத்துவசாலைகள் | 186 |
| 23 | கனவு பலித்தது | 717 |

| எண். | | பக்க எண். |
|---|---|---|
| 24 | காளத்தி வேடன் | 432 |
| 25 | குடகுமலைப் பெண் | 670 |
| 26 | குரு உபதேசம் | 780 |
| 27 | குரு வழிபாடு | 239 |
| 28 | சக்தி | 391 |
| 29 | சம்பந்த சரணாலயர் | 48 |
| 30 | சிவராத்திரி | 211 |
| 31 | சிவாகமும் சிவாலயமும் | 136, 200. 297, 364, 634 |
| 32 | சிற்றிலக்கியம் | 615, 665 |
| 33 | சீவகசிந்தாமணியில் உள்ள ரசங்கள் | 11, 93, 180, 264 |
| 34 | சூரியன் | 62 |
| 35 | செம்மனச்செல்வி | 809 |
| 36 | செய்திகள் | 73, 153, 227, 310, 382, 440, 512, 570, 638, 706, 768, 829 |
| 37 | சென்னை சமயப் பிரசார நிலையத்தில் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள் | 330 |
| 38 | சைவசமய சாரம் | 294 |
| 39 | சைவசித்தாந்த சங்கிரகம் | 343 |
| 40 | சொன்னாலும் வாய்மணக்கும் | 146 |
| 41 | தமிழ்ப் பண்பு | 752 |
| 42 | தமிழினைப் போற்றுவாய் | 630 |
| 43 | தருமபுர ஆதீன ஆவணிமூல நன்னாளில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளுரை | 687 |
| 44 | தருமையாதீனத்தில் | 519 |
| 45 | தலயாத்திரை | 725 |
| 46 | தற்புகழ்ச்சி | 283 |
| 47 | தனிமையில் இன்பம் | 131 |
| 48 | தனுர் மாதத் தலயாத்திரை | 140, 223 |
| 49 | தக்ஷிணாமூர்த்தி சுலோகம் | இதழ் 1ல் கக |
| 50 | திரு. எம். பக்தவத்சலம் அவர்களுக்கு வரவேற்புரை | 531 |
| 51 | திருக்கயிலாய பரம்பரையும் ஆதீனமும் | 455 |
| 52 | திரு. கே. காமராஜ நாடார் அவர்களுக்கு வரவேற்புரை | 531 |
| 53 | திருநாவுக்கரசு நாயனார் வரலாறு | 448 |
| 54 | திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு | 492, 545 604 |
| 55 | திருவியமகத் தேவாரக் குறிப்புரை | 174, 259, 339 415, 473 |

| எண். | | பக்க எண். |
|---|---|---|
| 56 | திருவெம்பாவை | இதழ் 1ல் ந |
| 57 | திருவேரகம் | 748, 804 |
| 58 | தோட்டிற் பழக்கம் | 762 |
| 59 | தொண்டைநாட்டுத் தல வழிபாடு | 698 |
| 60 | தொண்டைநாட்டுத தலயாத்திரை | இதழ் 1ல் எ, 113, 225, 305, 378 |
| 61 | நடுநாட்டுத் தலயாத்திரை | 56 |
| 62 | நம் ஆலயங்கள் | இதழ் 2ல் கo |
| 63 | நல்லறங் காவலர் | 600 |
| 64 | நற்றிணை | 191, 278 |
| 65 | நற்றிணையும் நாரணனும் | 368 |
| 66 | நற்பேறு அளித்தார்க்கு நன்றி | 758 |
| 67 | பண்ணும் பதிகமும் | 419 |
| 68 | பதினாருவதாண்டு மலர்ப் பன்னிரண்டு இதழ்களின் பொருளடக்கம் | 93 |
| 69 | பழந்தமிழ் நூல்களில் உயிர்வகைகள் | 19, 106, 268, 352, 477, 819 |
| 70 | பார்த்திபேந்திரவர்மரின் கல்லெழுத்துக்கள் சில | 285, 356, 428 |
| 71 | பார்ப்பார்க்கல்லது பணிபறியலையே | 163 |
| 72 | புத்தாண்டு வாழ்த்து | 323 |
| 73 | புதியயாண்டு வாழ்த்து | இதழ் 1ல் க |
| 74 | புதுமைக்கு | 29, 101, 206, 273, 436, 557, 626 |
| 75 | பெரியோர் உரைகள் | 336 |
| 76 | பெருந்துணை | 121 |
| 77 | பெருந்தேவனார் கவிச்சித்திரம் | 25, 98 |
| 78 | பொங்கல் வாழ்த்து | இதழ் 2ல் க |
| 79 | மகளிர் மாண்பு | 360, 562 |
| 80 | மகா தேவாலயங்களினும் மடாலயங்கள் மாண்புடையவை | 205 |
| 81 | மதிப்புரை | 224, 234, 296, 381, 444, 454, 577 |
| 82 | மலையாளநாட்டுத் தல யாத்திரை | 69, 151, 221, 301, 375 |
| 83 | மன்றுளாரும் மருதக்குயிலும் | 372 |
| 84 | மாணவர்கள் | 583 |
| 85 | முதுபெருநூல்களில் முக்கணன் முதன்மை | 36, 127 |
| 86 | முப்பொருள் விளக்கம் | 683, 742, 799 |

| எண். | | பக்க எண். |
|---|---|---|
| 87 | முழுமுதல்வன் | 196 |
| 88 | முற் சேர்பு | இதழ் 12ல் சு |
| 89 | மெய்கண்ட தேவநாயனுர் தோத்திரப்பா | 480 |
| 90 | வரப்போகுது | 44 |
| 91 | வரவேற்புரை | 730 |
| 92 | வாயுறை வாழ்த்து | 622 |
| 93 | வாழ்வது எப்படி | 676, 784 |
| 94 | வேதாகமசாரமே தேவாரம் | 565 |
| 95 | ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாறு | 459 |
| 96 | ஸ்ரீ குருஞானசம்பந்தர் விழா | 568 |
| 97 | ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளிய ஞானபோதம் | 1 |
| 98 | ,, குருமொழி | இதழ் 2ல் எ |
| 99 | ,, அருள்மொழி | 166 |
| 100 | ,, வாழ்த்துரை | 523 |
| 101 | ,, அருளுரை | 526, 587, 655, 733, 778 |
| 102 | ஸப்தஸதி விளக்கம் | 399 |


## தமிழ் பரப்பும் ஞானசம்பந்தம்

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
    ஞான சம்பந்தனுக்குல கவர்முன்
தாளம் ஈந்துஅவன் பாடலுக்கு இரங்கும்
    தன்மையாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின்று ஆடும்
    அங்கணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
    கோலக்காவினிற் கண்டுகொண் டேனே.

(சுந்தரர்)

உ

சிவமயம்

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

## தோகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. திருவாசகம் | ரூ. | 2—00 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—00 |
| 2. திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் | | |
| முதல் திருமுறை (ராப்பர்) | ரூ. | 3—50 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—33 |
| இரண்டாம் திருமுறை (காலிகோ) | ரூ. | 5—00 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—54 |
| மூன்றாம் திருமுறை (காலிகோ) | ரூ. | 5—75 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—57 |
| 3. திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் | | |
| நாலாம் திருமுறை (காலிகோ) | ரூ. | 8—00 |
| பதிவு தபால் செலவு | ரூ. | 1—57 |

கிடைக்குமிடங்கள் :—

1, காஷியர்,
தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்,

2. டிரஷரர், ஸ்ரீ வேளூர் தேவஸ்தானம்,
வைத்தீசுவரன்கோயில்,

3. காஷியர், ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்,
சீகாழி, தஞ்சாவூர் ஜில்லா.

4. காஷியர், ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானம்,
திருபுவனம், (திருவிடைமருதூர்).

5. காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
திருப்பனந்தாள், கும்பகோணம் வழி,

6. காஷியர், ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானம்,
திருக்கடவூர், தஞ்சாவூர் ஜில்லா.

7. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலயம்,
41, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

8, தருமபுரம் மடம் காரியம்,
வீரராகவபுரம், திருநெல்வேலி சந்திப்பு, திருநெல்வேலி.

GNANASAMBANDAM Regd. No. M. 4454



தருமபுர ஆதீனம் : திருநெல்வேலி சிந்துபூந்துறை மடத்தின் முகப்பு

**Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—12—58.**